உ






# ஞானச்சுடர்

புரட்டாதி மலர்

1998





வெளியீடு

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குறள் வழி

" அன்றறிவாம் என்னாது அறஞ்செய்க மற்றுஅது
பொன்றுங்கால் பொன்றாத் துணை. "

பொருள் :

பிற்காலத்தில் தருமம் செய்வோம் என்று கருதாது என்றும் செய்யுக. அவ்வறம் இறக்கும்போது துணை புரியும்.

ஸ்ரீ

அருணாசல அக்ஷர மணமாலை

நூல்

அருணாசலசிவ அருணாசலசிவ
அருணாசலசிவ அருணாசலா !

31) சுகக்கடல் பொங்கச் சொல்லுணர் வடங்கச்
சும்மா பொருந்திடங் கருணாசலா (அ)

32) சூதுசெய் தென்னைச் சோதியா தினியுன்
சோதி யுருக்காட் டருணாசலா (அ)

33) செப்படி வித்தைகற் றிப்படி மயக்குவிட்
டுருப்படு வித்தைகாட் டருணாசலா (அ)

34) சேரா யெனின்மெய் நீரா யுருகிக்கண்
ணீராற் றழிவே னருணாசலா (அ)

35) சையெனத் தள்ளிற் செய்வினை சுடுமலா
லுய்வகை யேதுரை யருணாசலா (அ)

[தொடரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர்

வெளியீடு - 2 சுடர் - 9

1 9 9 8 புரட்டாதி

## பொருளடக்கம்

| | | பக்கம் |
|---|---|---|
| 1) | மானுடத்தை மேம்படுத்தும் மாண்புமிகு கோட்பாடுகள் | 1 - 4 |
| 2) | மனக் கவலைக்கு மருந்து | 5 - 6 |
| 3) | பகவானை மறைக்கும் திரை | 7 - 8 |
| 4) | உண்மை வழி நின்ற சித்தர்கள் | 9 - 10 |
| 5) | இந்துசமய மரபின் குருகுலக்கல்விப் பாரம்பரியம் | 11 - 14 |
| 6) | பகல் தீவட்டி | 15 - 16 |
| 7) | விஸ்வரூபம் | - 17 |
| 8) | சுப்பிரமணிய அநுபூதி | 18 - 20 |
| 9) | தவயோகியின் தமிழ் மந்திரம் | 21 - 22 |
| 10) | சந்நிதியான் கருணை | 23 - 25 |
| | மாணவர் பக்கம் | |
| 11) | தமிழ் நாவல் இலக்கியம் | 26 - 28 |
| 12) | Easy Way to Learn English (Part-9) | 29 - 31 |
| 13) | விஞ்ஞான விளக்கம் | - 32 |

அன்பளிப்பு : மலர் ஒன்று 25/- ரூபா

வருட சந்தா தபால் செலவுடன் 325/- ரூபா.

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினர்.

அச்சுப் பதிப்பு : அச்சகம் - சந்நிதியான் ஆச்சிரமம்
தொண்டைமானாறு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புரட்டாதி மாத சிறப்புப் பிரதி பெறுவோர் விபரம்

K. சிவகுருநாதன்
( 50 A, பலாலி வீதி, யாழ்ப்பாணம் )

கா. கணேசநாதன், J. P.
( சமூகஜோதி, கொழும்புத்துறை )

பு. சாந்தரூபன்
( கிராம சேவையாளர் - தம்பாலை, கதிரிப்பாய் )

பா. இராசேந்திரம்
( கிராம சேவையாளர் - கெருடாவில் தெற்கு )

திரு. திருநாவுக்கரசு
( கரணவாய் தெற்கு )

ஸ்ரீ. கணேஸ்வரன்
( சக்தி மோட்டோர்ஸ் வேக்ஸ் திருநெல்வேலி )

அதிபர்
( வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயம், தொண்டைமானாறு )

அதிபர்
( சிவகுரு வித்தியாசாலை, வல்வெட்டித்துறை )

க. பொன்னுச்சாமி
( அம்மன் கோவிலடி, கரணவாய் தெற்கு )

அதிபர்
( அ. மி. கல்லூரி, உடுப்பிட்டி )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர் - ஆவணி மாத வெளியீடு

## வெளியீட்டுரை :-

கரணவாய் பொன்னம்பல வித்தியாலய அதிபர் திரு. பொன்னையா அவர்கள் ஆவணிமாத மலருக்கான வெளியீட்டுரையை நிகழ்த்தினார்கள். "ஞானச்சுடர்" மலரினை வெளியிட்டு வரும் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை சமயப் பணியையும், சமூகப் பணியையும் இணைந்து மேற்கொண்டு வருகிறது என்று குறிப்பிட்டார். இந்த மலர் ஆத்மீக விடயங்களை உள்ளடக்கி இருந்தாலும் சமூகத்தில் உள்ள பலருக்கும் நன்மை அளிக்கும் ஒரு செயற்பாடாகவே காணப்படுகின்றது. ஆகவே இந்த செயற்பாட்டை இவர்கள் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டும் என்று தனது உரையில் கேட்டுக் கொண்டார்.

## ஆய்வுரை :-

இந்த மலருக்கான ஆய்வுரையை ஓய்வு பெற்ற அதிபரும் பண்டிதருமாகிய திரு. சி. வேலாயுதம் அவர்கள் மேற்கொண்டார்கள். நூல்களை ஆய்வு செய்தல், விமர்சனம் செய்தல் போன்ற செயற்பாடுகள் புராதன காலத்திலேயே எமது மதத்திலும் பண்பாட்டிலும் தோன்றி விட்டது. அக்காலத்தில் நூல்களை வெளியிடுவதற்கு முன்பே ஆய்வுகளைச் செய்து அதன் பிறகுதான் நூலை வெளியிடுவார்கள். இப்பொழுது வெளியிடப்பட்ட பின்பு இவ்வாறான ஆய்வுரைகள் விமர்சனங்கள் நடைபெறுகின்றன.

மகாபாரதம் மற்றும் புராணங்கள், தோத்திரங்கள், பிரபந்தங்கள் எல்லாம் விரிவுபட்டதாக காணப்படுகின்றன. இங்கே பாரதமாகிய இதிகாசத்திலே இருந்து எமக்கு ஏற்றமாதிரியான கதைகளும், கருத்துக்களும், எடுத்துக் கூறப்படுகின்றன. இது மிகவும் வரவேற்கத்தக்க ஒன்றாகும். ஞானச்சுடர் வளர்த்து வரும் இளம் எழுத்தாளர்களுக்கும் ஆன்மீகக் கருத்துக்களை வெளியிடுகின்றவர்களுக்கும், அரிய சந்தர்ப்பத்தை வழங்குவதாகவும், திரு. வேலாயுதம் அவர்கள் தனது ஆய்வுரையில் குறிப்பிட்டார் மேலும் ஆவணிமாத மலரில் உள்ள கட்டுரைகளின் சிறப்புக்களையும், பக்திக் கருத்துக்களையும் மிகவும் உணர்ச்சி பூர்வமாக ஒவ்வொரு கட்டுரைகளில் இருந்தும் அடியார்களுக்கு எடுத்துக் கூறினார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனிது வாழி!

தெய்வநெறி சைவநெறி உலகம் எங்கும்
திகழ்ந்தினிது பரவுதற்கு நாளும் தொண்டு
செய்யு நிரந்தரியான் சைவ கலை
பண்பாட்டுப் பேரவையின் "ஞானச்சுடர்"
வையமெலாம் பயன்எய்த வழங்குகின்ற
மாண்புடை பேரவையார் மகிமைபற்றி
கையளந்த நான்முகன் எழுதப் போமோ?
கனித்தமிழில் அடங்கிடுமோ கவிகள் எல்லாம்.

சித்தமதில் எப்பொழுதும் இறையைத் தாங்கி
இசைவுடைய நறுந்தமிழில் தெளிவுமிக்க
புத்தகமாம் புதுமையுறு "ஞானச்சுடர்"
புவியினர்க்கு வழங்கியுயர் புகழ்விளங்கும்
வித்தகமாம் சந்நிதியான் பேரவையார்
மேன்மைகளும் மேல்நிலையும் மிகுந்துயர
அத்தன்முருகன் அருளாறும் பொழிவான் - நீண்ட
ஆயுளுடன் அப்பெரியார் இனிதுவாழ்!

சிவஸ்ரீ. தியாக. சோமஸ்கந்தராஜாக் குருக்கள்
(ஆசிரியர், யா/ஹாட்லிக் கல்லூரி)
தும்பளை, பருத்தித்துறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக ஆசிரியர் தினம்

மனிதனுடைய வாழ்க்கை முறையிலும் வாழ்க்கைச் சூழலிலும் இன்று எவ்வளவோ மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. அதேபோல மனித சமுதாயம் இனரீதியாகவும், மொழிரீதியாகவும், மதரீதியாகவும், பிரதேசரீதியாகவும் இன்று எத்தனையோ வேறுபாடுகளையும் கொண்டிருக்கிறது. இத்தகைய மாற்றங்கள், வேற்றுமைகள் மத்தியிலும் இந்த வேறுபாடுகள் அனைத்தையும் கடந்து தொழில்ரீதியாக உலகம் முழுவதும் ஆசிரியத் தொழிலை மேற்கொண்டு வருபவர்களை ஒன்றிணைக்கின்ற தினமாக 'உலக ஆசிரியர் தினம்' கொண்டாடப்படுகிறது. ஒக்டோபர் ஆறாந்திகதி ஆசிரியத் தொழிலின் சிறப்பையும், புனிதத்தையும், அதன் முக்கியத்துவத்தையும், நினைவு கூர்ந்து உலகம் முழுவதும் இந்த ஆசிரியர் தினம் கொண்டாடப்படுகிறது.

உலகம் முழுவதும் இந்த ஆசிரியர் தினம் கொண்டாடப்பட்டாலும் தமிழர்களாய்ப் பிறந்து இந்துப் பாரம்பரியத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் நாம் மிகுந்த அக்கறையுடனும், புனிதத்துடனும் இந்தத் தினத்தை கொண்டாட வேண்டும். குருகுலக்கல்விப் பாரம்பரியத்தை எமது சமுதாயம் கொண்டிருந்த காலகட்டத்தில் குருவுக்கு கொடுத்த அந்த இடத்தை உலகத்தில் வேறு எந்த சமுதாயமும் குருவுக்கு கொடுக்கவில்லை என்பதை எமது பண்பாட்டின் மூலம் நாம் அறிய முடிகின்றது.

ஐரோப்பியருடைய வருகையைத் தொடர்ந்து கல்வியின் நோக்கமும், கல்விச் செயற்பாடுகளும் மாற்றமடையத் தொடங்கியதுடன், கல்வி நிறுவனரீதியான அமைப்புக்குட்பட்டதாகவும் மாற்றமடைந்தது. இங்கே குரு வகித்த பாத்திரத்தை ஆசிரியர் வகிக்கத் தொடங்கினார். ஆனாலும் குருவினுடைய இயல்புகள் பலவற்றை ஆசிரியரும் பின்பற்றி வந்தமை மிகவும் வரவேற்கத்தக்க ஒரு அம்சமாக விளங்கியது. இவ்வாறு கல்வித் துறையில் பல மாற்றங்கள் ஏற்பட்டுக் கொண்டு வந்தாலும் ஆசிரியர்கள் குருவுக்கு சமமான இடத்திலேதான் அண்மைக் காலம் வரை மதிக்கப்பட்டார்கள்.

இன்று பல்வேறு துறைகளில் சமுதாயத்தில் உயர் நிலையில் இருக்கின்ற பெரியோர்கள் பலர் தமது காலத்தில் ஆசிரியர்கள் முன்மாதிரியாக இருந்து கல்வியுடன் சேர்ந்து நல்ல பழக்கவழக்கங்களையும் போதித்தனர் என்பதை நன்றியுடன் நினைவுகூறுகின்றனர். தற்போதைய யாழ்மாவட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வித்திணைக்களக் கட்டடப் பொறியியலாளர் திரு. கு. சிவபாலன் அவர்கள் அண்மையில் பாடசாலையில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் பேசும்பொழுது பின்வருமாறு குறிப்பிட்டார்கள்.

" ஆசிரியர்கள் பணத்துக்காக அன்றி சமுதாய நலனுக்காக வாழ்க்கையோடு இணைந்த கல்வியை எமது காலத்தில் போதித்ததனால் தான் அவர்களை மறக்க முடியாத தெய்வங்களாக இன்று நாம் நினைக்கின்றோம். இந்த நிலை தொடர வேண்டும் என்பதே இன்று எங்களுடைய விருப்பமாகும். "

இத்தகைய கருத்துக்களை இன்று ஆசிரியத் தொழிலை மேற்கொள்கின்றவர்கள் கருத்தில் எடுத்துச் செயற்படுவது விரும்பத்தக்கது.

இன்று ஆசிரியத் தொழிலை புனிதமான தொழிலாக நினைத்து செயற்படுகின்ற தன்மையும், புனிதமான தொழிலாக நினைத்துச் செயற்படுகின்றவர்களின் எண்ணிக்கையும் அளவில் குறைந்திருப்பதை யாரும் மறுக்கமுடியாது. ஆனால் இத்தகைய சூழ்நிலைகளிலும் இலைமறை காயாக நல்ல ஆசிரியர்களாகச் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றவர்களை இனம் கண்டு அவர்களைக் கௌரவித்து அவர்களுக்கு சமுதாயத்தில் உயர்ந்த இடத்தைக் கொடுப்பதன் மூலம் அவர்களை நாம் மேலும் ஊக்கப்படுத்தமுடியும். அத்துடன் நல்ல ஆசிரியர்களின் எண்ணிக்கையை மேலும் சமுதாயத்தில் அதிகரிக்கவும் இது காரணமாக அமையும்.

உலக ஆசிரியர் தினத்தில் ஒட்டு மொத்தமாக ஆசிரியர் சேவையின் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு ஆசிரிய சமுதாயத்தை கௌரவிக்கின்ற அதேநேரம் நல்ல ஆசிரியர்களை இனம் கண்டு அவர்களை ஊக்கப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டியதும் அவசியமானதே.

கல்விக்கென தனியான இடம் ஒதுக்கி கல்விச் சமுதாயத்துடன் நெருக்கமான தொடர்புகளைக் கொண்டுள்ள 'ஞானச்சுடர்' உலக ஆசிரிய தினத்தில் கல்விச் சமுதாயத்தின் ஆணிவேராகத் திகழும் ஆசிரியப் பெருமக்களுக்கு தனது வாழ்த்துக்களையும், வணக்கங்களையும் தெரிவித்துக் கொள்கின்றது.

ந. அரியரத்தினம்
செயலாளர்
ச. ஆ. சை. க. ப. பேரவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மானுடத்தை மேம்படுத்தும் மாண்புமிகு கோட்பாடுகள்

( மகாபாரதத்திலிருந்து )

## மும்மணிகள்

அம்பை அஸ்தினாபுரத்தை விட்டு நீங்கியதும், அம்பையின் சோதரிகளான அம்பிகை, அம்பாலிகை இருவரையும், தனது தம்பியான விசித்திர வீரியனுக்குத் திருமணம் செய்து வைத்தார் பீஷ்மர். விசித்திர வீரியன் அகமகிழ்வுடன் இரு மனைவியருடனும் வாழ்ந்து வந்தான். ஏழு ஆண்டுகளின் பின்பு விதி வழியே அவன் மண்ணுலக வாழ்வு முடிவடைந்தது. அன்றியும் அவனுக்குப் புத்திர பாக்கியமும் ஏழு ஆண்டுகள் வரை கிட்டவில்லை. இவற்றினால் மிக்க துயரமடைந்தனர் அன்னை சத்தியவதியும், பீஷ்மரும். தம் குலம் தழைக்க யாது வழி உள்ளது? என்று இருவரும் கவலை கொண்டு, வேத புராணங்களில் இதற்கு மாற்று வழி ஏதும் உண்டா எனப் பிராமணோத்தமர்களைக் கலந்துரையாடினர். அதற்கு அறத்தின் நுட்பங்களைக் கற்றறிந்த அவர்கள், சிறந்த தவசீலர்களின் அருளை வேண்டும்படி பணித்தனர்.

இவற்றைச் செவியுற்ற அன்னை சத்தியவதி, தான் தந்தையுடன் இருந்த போது, பராசர முனிவரின் அருளால் வேதவியாச மகரிஷி தனது புதல்வனாக, அவதரித்தமையைக் கூறி வேதவியாச மகரிஷியின் வாக்குப்படி, அவர் தமக்கு உதவி புரிவார், என்பதனையும் பீஷ்மரிடம் எடுத்துக் கூறினாள். இவ்வரலாற்றினைச் செவியுற்ற பீஷ்மர், வியாச மகரிஷியை வரவழைக்கும் படி, அன்னை சத்தியவதிக்கு எடுத்துரைத்தார். அன்னை சத்தியவதி, தனது மைந்தனாகிய வியாச மகரிஷியை நினைந்து பிரார்த்தித்தாள். பிரார்த்தனையின் பயனாக வியாச மகரிஷி அவ்விடத்தில் பிரசன்னமானார். வியாசரைக் கண்ட அன்னை சத்தியவதி, தனது மூத்த புதல்வனின் வருகையால் உவகை கொண்டாள். அவரை வரவேற்று பூசனைகள் புரிந்தாள். அதன் பின்னர், தம்குலத்துக்கு ஏற்பட்டுள்ள நிலையை எடுத்துக் கூறி அந்நிலையினை மாற்ற அவர் உதவ வேண்டும் என்று வேண்டிக் கொண்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வுரைகளைச் செவிமடுத்த வியாசமகரிஷி அன்னையின் வேண்டுதலுக்கு உடன்பட்டுக் குலம் தழைக்க தன்னருள் கிட்டும் என்று அன்னையை ஆசீர்வதித்தார். வியாச மகரிஷியின் அருளால், விசித்திர வீரியனின் இரு மனைவியரான, அம்பிகை, அம்பாலிகை இருவருக்கும் புத்திரப் பாக்கியம் கிடைத்தது. அம்பிகையின் மைந்தன் முதலாவதாகப் பிறந்தான். அவனுக்குத் திருதராஷ்டிரன் என்னும் நாமம் சூட்டினார் பீஷ்மர். அம்பாலிகையின் மைந்தன் இரண்டாமவனாகப் பிறந்தான். அப்புதல்வனுக்குப் பாண்டு என்னும் நாமம் சூட்டினர். இரு புதல்வர்களையும் அகமகிழ்வுடன் கண்ணுற்ற அன்னை சத்தியவதி கவலை அடைந்தாள். மூத்த புதல்வனாகிய திருதராஷ்டிரன் கண் பார்வை அற்றவனாக இருந்தான். இரண்டாவது மைந்தன் பாண்டு, வெளிறிய தோற்றம் உடையவனாக இருந்தான். இதனால் கவலையுற்ற சத்தியவதி, இன்னும் ஓர் புதல்வனைப் பெற விரும்பினாள். ஆனால், அம்பிகையும், அம்பாலிகையும் அதற்கு உடன்பட மறுத்து விட்டனர். இதனால் அறிவும் குணநலன்களும் மிக்க அம்பிகையின் தாதிப் பெண்ணிடத்து அழகு மிக்க புதல்வன் ஒருவன் வியாசரின் அருளால் தோன்றினான். இத்தாதியின் குழந்தைக்கு விதுரன் எனப் பெயர் சூட்டினர். தம் குலம் விளங்க மூன்று புதல்வர்கள் முனிவர் அருளால் கிடைத்தமையால் பீஷ்மரும் அன்னை சத்தியவதியும் உளமகிழ்வுடன் இருந்தனர்.

## தர்ம தேவதைக்குத் தண்டனை

"மாண்டவ்யர்" என்னும் பெயருடைய சிறந்த தபோதனர் ஒருவர் இருந்தார். இவர் தவத்தில் சிறந்தவராய்ச், சத்தியத்தைக் கடைப்பிடிப்பதில் மிக்கவுறுதி உடையவராயும் விளங்கினார். வனத்தின்புறத்தே ஆச்சிரமம் அமைத்துத் தம் தவவாழ்வை மேற்கொண்டார். ஓர்நாள் ஆச்சிரமத்தின் முன்பாக மரநிழலில் இவர் அமர்ந்திருந்தவேளை, அரண்மனையின் களவாடிய பொருட்களுடன் திருடர்கள் சிலர் ஓடிவந்து, இவரின் ஆச்சிரமத்தினுள் ஒளிந்து கொண்டனர். அத்திருடர்களைத் துரத்தி வந்த அரண்மனைச் சேவகர்கள் இவரை விசாரித்தனர். அத்திருடர்களைப் பற்றி மௌனவிரதம் பூண்டு தவவாழ்வில் ஈடுபட்டிருந்த மாண்டவ்ய முனிவர் ஒன்றும் பகராது மௌனமாயிருந்தார். சேவகர்கள் இவர் மௌனமாக ஒன்றும் பேசாதிருப்பதினைக் கண்ணுற்று, ஆச்சிரமத்தினுள் புகுந்து தேடலானார்கள். ஆச்சிரமத்தினுள் திருடர்கள் பதுங்கி இருப்பதனைக் கண்டு அவர்களைப் பிடித்து திருடர்கள் வைத்திருந்த பொருட்களையும் கைப்பற்றினர். ஆச்சிரமத்தினுள் திருடர்களும் திருடப்பட்ட பொருட்களும் இருந்தமையால் சேவகர்கள் முனிவரையும் திருடர்களுடன் சேர்த்துப் பிடித்துச் சென்று மன்னவன்முன் நிறுத்தினர். நன்றாக விசாரணை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யாத மன்னன், இருடர்களுடன் சேர்த்து மாண்டவ்ய முனிவரையும் கழுவிலேற்ற உத்தரவிட்டான். கழுவில் ஏற்றப்பட்ட போது மாண்டவ்ய முனிவர் யோக நிலையில் இருந்தமையால் அவரின் உயிர் பிரியாது அவர் கழுவில் தொங்கிய வண்ணம் இருந்தார். முனிவரின் உயிர் பிரியாது இருப்பதனைக் கண்ட சேவகர்கள் அச்செய்தியை மன்னனிடம் சென்று உரைத்தனர். தனது தவறினை உணர்ந்த மன்னன், விரைந்து வந்து கழுவில் இருந்து முனிவரை விடுவித்தான். முனிவர் உயிருடன் இருப்பதைக் கண்ணுற்ற மன்னன் முனிவரின் பாதங்களில் விழுந்து மன்னிப்புக் கேட்டான். மன்னனை மன்னித்துவிட்ட முனிவர், தன் தபோவலிமையால் தரும தேவதையிடம் சென்றார்.

“நான் செய்த குற்றம் யாது? எனக்கு ஏன் இத்தண்டனை கிடைத்தது?” என்று தருமதேவதையிடம் வினாவினார் முனிவர். அப்போது தருமதேவதை “தபோதனரே, நீர் சிறுவனாக இருந்தபோது பறவைகளின் காலில் இரும்பைக் கட்டி அவற்றைப் பறக்க முடியாதவாறு துன்புறுத்தினீர். இதனால்தான், உமக்கு இத்தண்டனை கிடைத்துத் துன்பப்பட்டீர்” என்று கூறியது. அப்போது முனிவர், “குழந்தைப் பருவத்தில் ஒருவர் செய்யும் குற்றம் அவனைச் சேராது. பிறப்பில் 12 வயது வரை, அவன் சாத்திரங்களையோ நீதி நூல்களையோ, அற நூல்களையோ கற்று, அதனைத் தெளிவாக உணரமுடியாது. உணரமுடியாத வயதில் அவன் பாவம் செய்யும் போது, அப்பாவத்திற்குத் தண்டனை கிடையாது. இந்த தர்மத்தை உணராது யான் சிறுவனாக இருந்தபோது செய்த குற்றத்திற்கு எனக்குத் தண்டனை அளித்த நீ, பூவுலகில் மானிடனாகப் பிறக்கக் கடவாய்” என்று தர்மதேவதைக்குச் சாபமிட்டார் முனிவர். இதனால் தர்மதேவதை மானிடனாகப் பிறந்தது. அக்குழந்தையே விதுரனாவான். தர்மதேவதை மனித வடிவில் வந்தமையால் விதுரர், தர்மத்தைப் பேணுவதிலும், சத்தியம் தவறாததும் தன் வாழ்நாள் முழுவதும் வாழ்ந்து வந்தார்.

## திருமணம்

திருதராஷ்டிரனும், பாண்டுவும், விதுரனும் சிறுவர்களாக இருந்தமையால் பீஷ்மர் அரசியல் கருமங்களை ஆற்றிவந்தார். அந் நாளில் அஸ்தினாபுர மக்கள் மிக நிறைவுடன் வாழ்ந்து வந்தனர். தர்மம் செழிக்கத் தொடங்கியது. செல்வம் செழித்தது. மக்கள் இன்பமுடன் அறவாழ்வை மேற்கொண்டனர். புதல்வர்கள் மூவரையும் தனது குழந்தைகளைப் போல தம்போல் பேணிக்காத்து வந்தார் பீஷ்மர். கல்வியில் தேர்ந்த ஆசானைத் தேடிக் கொணர்ந்து அவர்களுக்குக் கல்வி புகட்டலானார். அத்துடன், மன்னவர் கட்குரிய, வில், வாள், போன்ற படைக்கலப் பயிற்சிகளையும் பயிற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்தார். சிறந்த குணநலன்களுடன், குழந்தைகள், மூவரும், சிறந்த வீரர்களாக விளங்கிக் காளைப் பருவத்தையடைந்தனர். இதனால், புதல்வர்களுக்குத் திருமணம் செய்துவைக்க விழைந்தனர், அன்னை சத்தியவதியும், பீஷ்மரும்.

பலநாட்டு மன்னர்களின் புதல்வியர்களையும் விசாரித்துவர ஒற்றர்களை அனுப்பி வைத்தார் பீஷ்மர். இதன் பிரகாரம் காந்தார நாட்டு மன்னன் சுபலனுக்கு அழகும் பண்பும் மிக்க, காந்தாரி என்னும், புதல்வியும், போஜராஜனுக்குக் குந்தி என்னும் பெயர் பூண்ட சிறந்த குணநலன் மிக்கவளான புத்திரி இருப்பதனையும், மத்ரநாட்டு மன்னன் சல்லியனுக்கு மாத்ரி எனும் நாமம் பூண்ட நங்கை நல்லாள் சோதரியாகவும் இருப்பதனை அறிந்து கொண்டார். முதலில் காந்தார நாட்டு மன்னனிடம் தூதுவர்களை அனுப்பித் திருதராஷ்டிரனுக்குக் காந்தாரியை மணம் முடித்துத் தரும்படி கேட்டுக்கொண்டார். திருதராஷ்டிரன் கண் அற்றவனாக இருப்பதனால் முதலில் தயங்கினான். மன்னன் பின்னர் சிந்தித்துப் பார்த்து யோசனை செய்து, பீஷ்மரின் குலமேன்மையையும் புகழையும் உத்தேசித்து ஒருவாறு தன் மகளை மணம்செய்து கொடுக்க இசைந்தான். தனது புதல்வனான சகுனியுடன் நிறைந்த சீர்வரிசைகளையும் கொடுத்துத் தன் புதல்வியை அஸ்தினாபுரத்துக்கு அனுப்பி வைத்தான்.

வேதவிதிப்படி விமரிசையாகக் காந்தாரியைத் திருதராஷ்டிரனுக்குத் திருமணம்செய்து வைத்தார் பீஷ்மர். தனது கணவன், கண்பார்வை அற்றவர் என்பதனை அறிந்து கொண்ட காந்தாரி, தனது ஒளிமிக்க இருகண்களையும் பட்டுத்துணியால் இறுகக்கட்டி தானும் பார்வையற்றவளாக வாழத்தலைப்பட்டாள். இவளின் கற்பின் தன்மையைக் கண்ட அனைவரும் அவளைப் போற்றிப் பாராட்டினர். திருமணம் இனிதாக நடந்தேறியது. காந்தாரியின் சகோதரனான சகுனி தன் நகரம் திரும்பினான். பாண்டுவின் திருமணத்தை விரைவில் செய்வதற்கான ஏற்பாடுகளில் ஈடுபடலானார் பீஷ்மர். அதன் விளைவாய், போஜராஜனின் புதல்வியாகிய குந்தியைப் பாண்டுவிற்கு விவாகம் செய்ய முற்பட்டார்.

தொடரும்

நூலகர்,
வலிகாமம் பிரதேச சபை,
காங்கேசன்துறை.
(பிலைடகம்)

அருள்ஞான வித்தகர்
சிவத்திரு வ. குமாரசாமிஐயர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனக் கவலைக்கு மருந்து

அரிது அரிது மானுடராய்ப் பிறத்தல் அரிது.

பிறந்தபின் நோய், பிணியின்றி வாழ்தல் மிக அரிது.

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்.

இவ்வுலக வாழ்விலே மனிதன் எத்தனை விதமான நோய்களால் பாதிக்கப்படுகின்றான். அண்மையில் பலராலும் பேசப்பட்டு வரும் ஒரு கொடூர உயிர்க்கொல்லி நோய் ''எயிட்ஸ்''. ஆனால் இதினும் மிகக் கொடியநோய் மனக்கவலை எனலாம். உடலையும், உள்ளத்தையும் ஒரே நேரத்திற் பாதிக்கும் நோய் மனக்கவலை. இந்நோயினால் பீடிக்கப்பட்டவருக்கு மனநிம்மதியே கிடை. யாது. உணவிருந்தும் பசியிருக்காது; படுத்துறங்கப் பஞ்சுமெத்தையிருந்தும் தூக்கம் வராது; எந்த ஒரு தொழிலையுஞ் செய்ய மனம் ஏவாது. எல்லா வசதிகளுமிருந்தும் மனநிம்மதியின்றேல் வாழ்வினாற் பயன் ஏது?

இந்நோய் தோன்றுவதற்குக் காரணம் யாது? பேராசை, பேரிழப்பு, பிரிவு, தனிமை, விருப்பு, வெறுப்பு, தோல்வி, வசதியின்மை, வறுமை, தீராதநோய் எனப் பல காரணங்களை அடுக்கிக் கொண்டே போகலாம். இன்றைய சூழ்நிலையில், நமது நாட்டிற் பல்லாயிரம் மக்கள் தமது மக்கள், மருமக்கள் மற்றும் உறவினரையிழந்து மனக்கவலையில் இருக்கின்றார்கள். இன்னும் பலர் தமது வீடுகளையிழந்து, சொத்துக்களையிழந்து, தேடிய பொருட்களையிழந்து மனக்கவலையில் இருக்கின்றார்கள். இந்நோய் குறித்த ஒரு வயதினரையோ, பருவத்தினரையோ பாதிப்பதன்று. அரசனுக்குமுண்டு மனக்கவலை; ஆண்டிக்குமுண்டு. ஆணுக்குமுண்டு, பெண்ணுக்குமுண்டு; குழவிக்குமுண்டு, கிழவிக்குமுண்டு. யாரும் இந்நோய்க்கு விதிவிலக்கில்லை. ''நோய்நாடி, நோய் முதல் நாடி, அது தணிக்கும் வாய்நாடி'' வைத்தியம் செய்யும் வைத்திய நிபுணர்களாலும் மாற்ற முடியாத நோய் இது.

ஆகவே, இத்தகைய கொடூர நோய்க்கு இதுவரை காலமும் மருந்து கண்டுபிடிக்கப்படவில்லையா என்ற கேள்வி எழுகின்றது. பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே இதற்கு மருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

''தனக்குவமை இல்லாதான் தாள் சேர்ந்தார்க்கல்லால்
மனக்கவலை மாற்றலரிது''

என்று மிகவும் தெளிவாகக் கூறியுள்ளார் தெய்வப்புலவர் திருவள்ளுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தத் ''தனக்குவமை இல்லாதான்'' யார்? அதற்கு விடை எமது சமய நூல்களிலே உள்ளது. கச்சியப்பசிவாச்சாரியார் ஒரு செய்யுளிலே இவ்விதம் கூறியுள்ளார்.

''உணர்விலான், குணங்குறியிலான், செயலிலான் உரைக்கும்
பேரிலான், ஒருமுதலிலான், பின்னிலான் பிறந்தோர்
சாரிலான், வரல்போக்கிலான் மேலிலான் தனக்கு
நேரிலான் உயிர்க்கடவுளாய் என்றுமே நின்றான்.''

இச்செய்யுளிலே கடவுள் என அவர் குறிப்பிடுவது முருகனையே. முருகனும் சிவனும் வெவ்வேறு மூர்த்திகள் என வாதாடுவோர் சிலர். இது பிழையான கூற்று. சிவனுடைய கொள்கை வடிவமே முருகன். சங்கரனும், சண்முகனும் ஒருவரே. உமாதேவியாருக்கு சிவபெருமான் கூறியதாக அமைந்துள்ள பின்வரும் செய்யுளிலிருந்து இதனை நாம் அறிந்து கொள்ளலாம்.

''ஆதலின் நமது சக்தி அறுமுகன் அவனும் யாமும்
பேதகம் அன்றால் நம்போல் பிரிவிலன் யாண்டும் நின்றான்
ஏதமில் குழவிபோல்வான் யாவையும் உணர்ந்தான் சீரும்
போதமும் அழிவில் வீடும் போற்றினர்க் கருளவுறுவான்.''

சிவன் வேறு, முருகன் வேறு என்று நினைத்ததினாலேயே சூரன் அழிந்தான். ஆகவே நாமும் அவ்விதம் சிந்திக்காமல், இச்சாசக்தி, கிரியா சக்தி, ஞானாசக்தியாகிய மூன்று சக்திகளையுமுடைய முருகனைச் சிந்தித்து வந்திப்போமாக. ஆறுபடை வீட்டிற்கதிபதியாகிய முருகன், அடியார்க்கு அருள்புரிவதற்காக தொண்டைமானாறு சந்நிதியில்வந்து கோவில் கொண்டுள்ளான். ''முருகா'' என்று ஓதுவார் மூவுலகில் அருமாத செல்வம் அடைவார், வியாதி அடைந்து நையார், ஒருகாலுந் துன்பம் எய்தார். ஆகவே நாம் உடல், உள்ளம், உணர்வு எல்லாம் ஒன்றுபட ''முருகா'' என்று ஓதி; மனக்கவலையை மாற்றிக் கொள்வோமாக. மனக்கவலைக்கு இதுவே நேரேயொரு மருந்து.

''ஆறிரு தடந்தோள்வாழ்க, அறுமுகம்வாழ்க வெற்பைக்
கூறுசெய் தனிவேல்வாழ்க, குக்குடம்வாழ்க செவ்வேள்
ஏறிய மஞ்ஞைவாழ்க, யானைதன் அணங்குவாழ்க
மாறிலா வள்ளிவாழ்க, வாழ்கசீரடியார் எல்லாம்''

''ஓம் ரோக நாச நாயகாய''

குரும்பசிட்டி,
புலோலி.
7 - 9 - 98

கு. மாணிக்கவாசகம்
(இளைப்பாறிய காணிப்பதிவாளரும்,
மாவட்டப் பதிவாளரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகவானை மறைக்கும் திரை

கிருஷ்ணானந்தா என்ற முனிவர் பல ஆண்டுகள் தவம் இருந்ததால் ஸ்ரீபகவான் முனிவரின் முன் தோன்றி, ''குழந்தாய்! இது இரும்பை பொன் செய்யும் 'பாதரச மணி' ஞானியாகிய உனக்கு கல், மண், பொன் மூன்றும் சமம் என்பதை யான் அறிவேன். இந்த பாதரச மணியின் மூலம் மக்களுக்குத் தொண்டு செய்'' என்று கூறி முனிவரிடம் மணியைக் கொடுத்து மறைந்தார்.

இரும்பை பொன் செய்யும் மணி முனிவரிடம் உள்ளது என்பதை அறிந்த கண்ணப்பன் என்ற குடும்பஸ்தன், முனிவர் கிருஷ்ணானந்தா இருந்த வனத்திற்குச் சென்று தன்னை சீடனாக ஏற்கும்படி கூறினான்.

முனிவர், ''குழந்தாய்! நீ தினமும் இல்லறத்தை கவனி! ஓய்வு நேரத்தில் இங்கு வந்து தொண்டு செய்!'' என்று கூறினார்.

கண்ணப்பன் உள்ளத்தில், பாதரச மணியைக் கவர்ந்து போக வேண்டும் என்ற ஆசை இருந்து கொண்டு இருந்தது.

சீடன் கண்ணப்பன், முனிவர் இல்லாத நேரத்தில் எல்லாம் ஆசிரமத்தை ஆராய்ந்து பாதரச மணியை ஆசையுடன் தேடி தோல்வியடைந்த வண்ணமே இருந்தான்.

பல ஆண்டுகள் சென்றன.

ஒருநாள் முனிவர் கிருஷ்ணானந்தா குளிக்கச் சென்றார். ஆனால், சீடன் கண்ணப்பன் அவர் நீண்ட தவம் செய்யச் சென்று விட்டார் என்று நினைத்தான். 'அந்த பாதரச மணி இந்தக் குடிசையில் தான் இருக்க வேண்டும். எனவே அவர் திரும்புவதற்குள் எப்படியாவது அதை எடுத்து விட வேண்டும்' என்று நினைத்து மீண்டும் எல்லா இடங்களிலும் தேடிப் பார்த்து பிறகு புதிய முயற்சியாக மண்ணைத் தோண்டியும் பார்த்தான். பொன் செய்யும் மணி கிடைக்கவில்லை. முனிவர் கிருஷ்ணானந்தா திரும்பி வந்ததும் ஆசிரமம் அலங்கோலமாக இருப்பதைக் கண்டார். ''குழந்தாய்! என்ன தேடுகிறாய்?'' என்று கேட்டார். ''ஆண்டவன் உங்களுக்கு கொடுத்தருளிய பாதரச மணியைத்தான் தேடிக் களைத்தேன்'' என்று சீடன் கண்ணப்பன் கூறினான்.

''என்னிடம் கேட்பதற்கென்ன? அதோ, அந்தப் பழைய டப்பாவில் இருக்கிறதே! எடு அதை'' என்றார் முனிவர். சீடன் கண்ணப்பனுக்கு ஆச்சரியம். மிக விலை உயர்ந்த பாதரச மணி இந்தப் பழைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டப்பாவிலா உள்ளது? இரும்பைப் பொன்னாக்கும் இந்தப் பொன்மணி பல நாட்களாக இதே டப்பாவில் அடைத்திருந்தும் இந்தத் தகர டப்பா மட்டும் பொன்னாக மாறாதது ஏனோ? ஒருகால் ஞானி ஆண்டவன் கொடுத்த மணியை மறைத்து ஏதாவது போலி மணியை வைத்திருப்பாரோ? என்று நினைத்தவாறு டப்பாவை எடுத்து முனிவரிடம் கொடுத்தான் சீடன்.

அவன் முனிவரைப் பார்த்து, ''சுவாமி! இது உண்மையான பாதரச மணி என்றால் இந்தப் பழைய இரும்பு டப்பா மட்டும் பொன்னாகாதது ஏன்?'' என்று கேட்டான்.

''குழந்தாய்! இது உண்மையான பாதரச மணிதான். அதில் சந்தேகமில்லை. இதோ பார்த்தாயா? இந்தக் கந்தல் துணி பொன் மணியைச் சுற்றி இருப்பதனால், பாதரச மணிக்கும் இரும்பு டப்பாவுக்கும் உள்ள தொடர்பு அற்றுப் போய் விட்டது. ஆகவே, அது பொன்னாகவில்லை'' என்று விளக்கம் கூறினார் முனிவர்.

தொடர்ந்து, ''கண்ணப்பா! உனக்கு ஆண்டவன் நல்ல சரீரமும், நோய்நொடியில்லா நல்வாழ்வும் கொடுத்துள்ளார். அது மட்டுமன்றி நல்ல மனைவி, மக்கள், சொந்த வீடு, நல்ல தொழில், நல்ல வருமானமும் ஆண்டவன் உனக்குக் கொடுத்துள்ளார். ஆசைக்கு அளவில்லை என்பது இப்பொழுது புரிகிறதா? இத்தனை வசதி உள்ள நீ இரும்பைப் பொன் செய்து வாழ ஆசைப்பட்டாய். இது நியாயமா? சிந்தனை செய்து பார்..

''அதோ மரத்தைப் பார். அது வேர் உள்ள வரையில் மரத்தை அழுக்க அழுக்க முளைத்துக் கொண்டே இருக்கும். வேர்தான் ஆசை ஆகும். ஈசனும், ஜீவனும் ஒரே உள்ளத்தில் நிறைந்திருக்கின்றார்கள். ஆனால், ஆத்மாவைச் (ஜீவனை) சுற்றி ஆசை என்ற கந்தல் சுற்றியிருப்பதனால் ஈசனுடைய தொடர்பு இல்லாமல் இருக்கிறது. ஆத்மாவே இந்த டப்பா. ஆண்டவனே (ஈசனே) இந்தப் பாதரச மணி. நான், எனது என்ற எண்ணங்களே இந்தக் கந்தல் ஆடை. ஆசை என்ற மாயத் திரையை அகற்றி விட்டால் ஆண்டவனை அறியலாம், பேறு அடையலாம்'' என்று விளக்கினார் முனிவர் கிருஷ்ணானந்தர்.

சீடன் கண்ணப்பனுக்கு ஆசை அழிந்தது. மனக்கண் மறைந்து, ஞானக்கண் தோன்றியது.

தொகுப்பு: சந்நிதியான் ஆச்சிரமம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உண்மை வழிநின்ற சித்தர்கள்

உள்ளத்துள் ஒளிரும் உண்மையை எடுத்துக் கூறும் உணர்வு மொழிகளே சித்தர்களின் பாக்களாகும். உடலையும் உள்ளத்தையும் உண்மையையும் உணரும் தகுதிக்கு விரைந்து உயர்ந்து நிற்கும் உறுதியுள்ளவர்களே சித்தர்கள். இத்தகைய சித்தர்களில் ஒருவராகிய காரைச்சித்தர் என்பவர் துவாபர யுகத்தின் முடிவுகாலத்திலும், கலியுகத்தின் தொடக்க காலத்திற்கு அண்மையாகவும் இருந்திருக்கும் என்பது பாக்களில் காட்டியவற்றின் மூலமும் ஒருவாறு ஊகிக்கவேண்டியுள்ளது.

அவர்களின் பாட்டில் கூறியுள்ளதை அவதானிக்கும்போது, கலியுகம் பிறந்து ஆயிரம் வருடங்களுக்குப்பின் என்னென்ன நடக்கப்போகிறது, என்னென்ன நடைபெறும், மக்களின் நிலைப்பாடென்ன, யோகிகளின் நிலை, இயற்கையின் சீற்றம், அரசர்களின் ஆளுமையின் நிலை, விஞ்ஞான வளர்ச்சி, விஞ்ஞானிகளின் ஆக்கம், விஞ்ஞானிகளுக்கு எச்சரிக்கை புத்தி மதி போன்றவற்றை பரிதாபத்துடன் உறுதியாகக் கூறிவைக்கின்றார் பின்வருமாறு.

## காரைச் சித்தர் பாடல்

யுகமாறிப் போச்சுதடா கலியுகத்தில்
யோகியவன் நிலைமாறிப் புரண்டு போவான்
சமமாறிப் போச்சுதடா சகத்திலுள்ளோர்
தமை மறந்தார் பொருள் நினைத்தே தவிக்கலுற்றார்
அமைமாறிப் போச்சுதடா காமம் கோபம்
அறுவகையாம் போர்க்குணத்த அதிகமாச்சே
பருவம் மாறிப் போச்சுதடா மனிதருக்குள்ளே
பூரணர்கள் மறைந்துள்ளார் ஏவரைக்காலே.

காலநெறி மாதவரைப்போல் வேளாய் கேளாய்
காணவரு மாயிரமாம் வருடத்துள்ளே
பாரடடா வலைத்துக் கேற்ப பாதை
பகலொளி கனலொளி பண்ணுவார்கள்
சிலமுறையாம் வர்ணதர்மம் சிதைந்துபோகும்
சிச்சிச்சையம் நூலறுகள் மாறிப்போகும்
கொலைமுறையாம் குவலயமே சட்ட திட்டம்
கூறுமடா கொதிக்குமடா நேயம் தூயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீராத புயல்களெல்லாம் திரண்டாலும்
திக்கெங்கும் எரிமலைகள் சீறிப்பாய்ந்திடும்
தேறாத நோய்களெல்லாம் திரண்டாலும்
திசைகலங்கும் பூகம்பத் திறமோடும்
நேராக நெறியெல்லாம் நடுங்கியோடும்
நெறியில்லா நெறியெல்லாம் நிறைந்தூடாடும்
போராகக் குருதிகொப் பளித்துப் பொங்கும்
புகையாக புவனமெலாம் புதைந்து போகும்

தெய்வமெல்லாம் விண்ணோடிப் போகும் போகும்
தீமையெலாம் மண்ணகத்தின் தெருக்கூத்தாகும்
உயர்தன்மை புனிதத்தன்மை ஓடிப்போகும்
உலகவுண்மை விஞ்ஞானம் கூடிவரும்
ஐயமில்லை யெனவகங்கா ரத்தால் துள்ளும்
ஐயையோ அறிவெல்லாம் கள்ளம் கள்ளம்
துய்யநெறி காட்டிநின்றார் சித்தர் சித்தர்
தூயநெறி காட்டுகின்றார் ரெத்தர் ரெத்தர்.

விஞ்ஞான விதியெல்லாம் வேகம் வேகம்
வேகமெனும் தாபத்தின் வித்தை வித்தை
அஞ்ஞான விதியெல்லாம் போகம் போகம்
அடடா கயிறறுந்த பொம்மலாட்டம்
மெய்ஞ்ஞானக் கதியெல்லா மரண வத்தின்
செயலறிந்த வேறில்லை சென்மம் சென்மம்
மெய்யான விதியெல்லாம் யோகம் யோகம்
மின்னாலெ சக்தியுடன் ராகம் சோகம்.

வித்தென்பான் முளையென்பான் பின் விருட்சென்பான்
வெப்பென்பான் காந்தத்தின் கட்டே யென்பான்
வித்தையடா விஸ்வமெல்லாம் சுழலும் மார்க்கம்
வித்தையடா ஆகர்ஷண வியப்பே யென்பான்
வெத்தறிவாம் கனியறியான் மேற்றோ லுண்பான்
விஞ்ஞானி யவனறிவைப் பழிக்க வில்லை
சித்தறிவான் சத்தறிவான் சித்தன் சித்தன்
சித்தத்திலே இருட்டிச் சித்தங்காண்பான்.

(விஞ்ஞானக்கு அறிவு புரியப் பாடியிருப்பது மறுபதிப்பில் தொடரும்)

"சிவம்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துசமய மரபின் குருகுலக்கல்விப் பாரம்பரியம்

இந்துப் பண்பாட்டின் பல்வேறு விழுமியங்களையும் பேணிப் பாது காத்த பெருமையினைப் பெற்றுக்கொள்வது இந்துக் கல்விப் பாரம்பரிய மரபிலே குருகுலக்கல்வியே பெற்றுக் கொண்டுள்ளது. இந்த வகையிலே இந்துக்கல்வி மரபிலே குருகுலக் கல்வியானது மிக மிக முக்கியமான இடத்தை வகிக்கின்றது. சனாதன தர்மம் என்கின்ற பெயரைத்தனதாக்கி அநாதியான மதமாகத் திகழ்ந்தாலும் அதன் ஆரம்ப காலத்திலிருந்தே புதுமை வாய்ந்த சிந்தனைகள், கருத்துக்கள், தத்துவங்கள் என்பன காலத் திற்குக்காலம் மெய்ஞ்ஞானிகள், அனுபூதிமான்கள், ஆச்சாரியார்கள், கல்வி மான்கள் முதலானோரால் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. இவை யாவும் இந்துசமய மரபிலே தோன்றிய குரு, சிஷ்ய பரம்பரையின் வெளிப்பாடு களாகவே அமைந்துள்ளன.

மனிதனை நெறிப்படுத்துவதற்கான வாழ்க்கைப் படிநிலைகளில் 'பிரம்மச்சரியம்' என்கின்ற முதல்நிலை மாணவநிலையைக் குறித்து நிற்கின்றது. வாழ்க்கைப்படி நிலையின் முதல் அம்சமே கல்வி கற்றல். ஆதலால் இந்துமரபிலே குருகுலக்கல்வியானது சிறப்பிடம் வகித்துள்ளது. இந்நிலையின் ஐந்து தொடக்கம் 12 வயது வரையான காலப்பகுதியிலே பெரியோரை மதித்தல், கீழ்ப்படிவு, பொறுமை, சகிப்புத்தன்மை, தன்ன டக்கம், அன்பு, இறைவழிபாடு முதலான இன்னோரன்ன வாழ்வின் அம்சங் களைக் கற்று குருவினது அகத்திலே தங்கி, கல்வி பெற்றுள்ளமை இந்துசமயக் கல்வி மரபின் சிறப்பு எனின் மிகையாகாது.

குரு என்பவன் அறியாமையை நீக்குபவன் என்ற பொருளில் அமைந்துள்ளது. அறிவும், ஆற்றலும், ஒழுக்கமும், பண்பும் ஒருங்கே அமையப்பெற்ற குரு கிடைப்பது இறைவனின் திருவருளாலேயே ஆகும். இவ்வாறான நிலையில் இக் கல்விப் பாரம்பரியம் பற்றிய சிறப்புக்களை மத இலக்கியங்கள் பல எடுத்துக் கூறுவதை அவதானிக்க முடிகின்றது. சிறப்பாகத் திருவருட்பயனில்

" அறியாமை உள்நின்று அளித்ததே காணும்
குறியாகி நீங்காத கோ "



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில மாணவரிடையே ஏற்றத்தாழ்வு காட்டாது எல்லோரையும் ஒரே நிலையில் வைத்து அவர்களது தன்மைக்கேற்ப அறிவையும், அறிவுரைகளையும் வழங்குபவராகக் காணப்படுகின்றார். இவ்வாறு குருவினது இயல்பு பற்றித் திருவருட்பயன் விளக்கியது நோக்கத்தக்கது.

குருவினது இயல்புகள், தன்மைகள் என்பவற்றை விளக்கிய இலக்கியங்கள் சிஷ்யனது, அதாவது மாணவனது இயல்புகள் பற்றியும் குறிப்பிடுகின்றன. சிறப்பாக வடமொழி இலக்கியங்களிலே சுலோக வடிவிலே இவை விளக்கப்பட்டுள்ளன. கல்வியானது தனிமனிதன் ஒருவனுக்கு அணிகலன் போன்றது என்பதை விளக்கும் பகுதியாக

"வித்யா நரஸ்ய பூசணம்"

அமைந்துள்ளது. கல்விகற்காதவன் மிருகத்திற்குச் சமனானவன் என்பதனை எடுத்துக்காட்டாக "வித்யாவிஹீன பசு" என்ற பகுதி அமைகின்றது.

பெற்றோரையும் ஆசிரியரையும் மதிக்கும் பண்பு, சமய தத்துவங்களைக் கற்பதிற் காட்டும் ஆர்வம், ஆன்மீகத்தைத்தேடும் ஆர்வம், நல்ல சிந்தனையுடனான மனப்பான்மையை உருவாக்குதல் என்ற வகையில் சிஷ்ய இயல்பு குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறான பாரம்பரியக் கல்வி முறையானது குரு அகக்கல்வி திண்ணைக்கல்வி, அமைப்பு ரீதியான கல்வி, நிறுவன ரீதியான கல்வி கட்டாயக் கல்வி முறை எனப் பல வளர்ச்சிகள்நிலை மாற்றங்களுக்குட் பட்டு மரபுக் கல்விமுறை தளர்வடைந்து "கல்வியே கண்" எனும் உயரிய நிலையை அடைந்துள்ளது. இவ்வாறான மாற்றமும் வளர்ச்சியும் வரலாற்று அடிப்படையில் வளர்ந்த வகையினை நோக்கினால்,

இந்து மதத்தின் முதல் இலக்கிய காலமாகிய வேதகாலப்பகுதியிலே குருவினது அகத்திலே மாணவர் தங்கி அவரது கடமைகளை, தேவைகளை நிறைவு செய்து மூல இலக்கியத்தைக் கற்றனர். மனக் கல்வியே சிறப்பிடம் பெற்றது. எடுத்துக் காட்டாக—வேதம் ஓதும் முறையானது ஒத்த ஓசையுடன் தவளைகள் கத்துவதுபோல அமைந்துள்ளது எனக்குறிப்பிட்டுள்ளமையை அறிய முடிகின்றது.

அடுத்து உபநிடத காலத்திலே சிஷ்யன் சிறப்பாக குருவினது அகத்திற்குச்சென்று ஞானம் பெற்ற நிலையே எனலாம். அதாவது உபநிடதம் எனும் மூல இலக்கியமே குரு சிஷ்ய உரையாடல்களின் வெளிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடாக அமைந்தமை, உபநிஷத் என்பதே அருகிருக்கக் கூறப்பட்டது ஆகும். இங்கு சிஷ்யனது பிறப்பானது முக்கியத்துவம் பெறவில்லை. மாறாக அவனது மனோநிலைத்தூய்மையே நோக்கப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக, சத்தியகாமனிடம் குரு பிறப்பைப்பற்றிக் கேட்க அவன் தனது தந்தை பெயர் தெரியாது என உண்மை கூறியநிலையில் சிறந்த ஒரு மாணவனாக அவனை ஏற்று நேர்மைக்கு மதிப்பளித்து கல்வி போதித்த தன்மை சிறப்பாக அமைந்துள்ளது.

தொடர்ந்து வந்த இதிகாச புராண காலங்களில் திண்ணைப்பள்ளி முறையிலே இந்துக்கல்வி மரபு பேணப்பட்டுள்ளது. சிறப்பாக குருகுலாச்சாரியார்களாக பீஷ்மர், துரோணர், முதலானோரும் குரு உபதேசமாகிய பகவத்கீதை புராண இலக்கிய வெளிப்பாடு என்பன இப்பாரம்பரிய மரபின் பிரசவிப்புக்களே ஆகும். மாணவன் தேடுவதைக் காட்டுதல், அவனை வழிப்படுத்தல், அவனது மனோநிலையை மேல்நோக்கி இழுத்தல் என்ற வகையிலே குரு சேவையானது அமைகின்றது. போர்க்களத்திலே எதிர் நிற்கும் குரு, சிநேகிதர், உறவினர், பெரியோர் முதலானோரைக் கண்டு கலங்கி யுத்தகளத்தில் நின்றும் பின்வாங்க எத்தனித்த வேளையிலே அவனைத் தடுத்து நிறுத்தி அவனது குறிக்கோள் நோக்கி இழுத்து வழிப்படுத்திய தன்மை ஆச்சாரியாராகிய கிருஷ்ணரையே சாருகின்றது. இதே போலவே மாணவனும் தனது குருவினது தேவையை நிறைவு செய்தான் என்பதற்குத் துரோணரின் மானசீகமாக அவரைக் குருவாக்கிக் கொண்ட ஏகலைவனிடம் அவனது வில்வித்தைப் பயிற்சிக்கு அவசியமான வஸ்துவைப் பெருவிரலையே குருதட்சணையாகக் கொடுத்த நிலை சிறப்பிற்குரியது.

தொடர்ந்து மன்னர் ஆட்சிக் காலப்பகுதியிலும் தென்னாட்டிலும் ஏனைய பிரதேசங்களிலும் மேற்குறிப்பிட்ட மரபானது பேணிப் பாதுகாக்கப்பட்டு வளர்ச்சி கண்டு கிளைகளுடன் மீண்டும் மரம்போல உலகெங்கும் பரந்து அறிவியற் கல்வியாக பிரசவித்துள்ளதை நோக்குகின்றோம். ஆத்மீகக் கல்வியே அறிவியற்கல்விக்கு வழிகோலியது என்றே கூற முடிகின்றது.

மேற்கூறப்பட்ட அமைவு ரீதியான கல்வி முறை நாட்டின் பொருளாதாரத்தேவை, அபிவிருத்தி முதலான தன்மைகளால் மாற்றமடைந்து கல்விக்கூடம், கலாசாலைக்கல்வி என்கிற வகையில் மாற்றங்களும் வேறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடுகளும் ஏற்பட்டபோதிலும், ''அறநெறிப் பாடசாலை'' யைப் பெரியார் சி. விநாசித்தம்பி அவர்களது வழிகாட்டலில் ஆலயத்தை மையமாகக் கொண்ட அமைப்புமுறை தொடர்கிறது. அத்தோடு இணுவில் மகாதேவக் குருக்களின் வழிகாட்டலில் 'தர்மசாஸ்தா குருகுலம்' சுப்பிரமணிய சாஸ்திரிகளின் வழிகாட்டலில் 'சிவானந்த குருகுலம்' என்பவற்றோடு செல்வி அப்பாக்குட்டி தங்கம்மா முதலான பல பெரியோர்களின் ஆதரவில் தொடர்ந்தும் ஆத்மீகவிருத்தியை, மெய்யுணர்வு, மெய்ப்பொருள் பற்றிய தெளிவு என மரபு ரீதியான கல்வி அமைப்பு முறை இன்றுவரை தொடர்ந்து பேணப்பட்டு வருவது வரவேற்கத்தக்கதும் தொடர்ந்து பேணப்பட வேண்டியதும் ஆகும்.

''எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு''

''ஆச்சார்யாத் பாதம் ஆதத்தே பாதம் சிஷ்ய
இஸ்வமேதயா பாதம் இகம் பரஹமசாரியத்
பாதம் காலக்ரமேணைய''

செல்வி கௌரி - சிவகுமாரசர்மா
நீர்வேலி.

## மனிதனின் நிறைவேறாத அங்கலாய்ப்பு

மனிதனுடைய வாழ்க்கைக்கு அப்பாற்பட்ட ஒன்றினை, எல்லையில்லா ஆற்றலைக் கொண்ட கணக்கும் அப்பாற்பட்ட ஒன்றினை மனிதன் அறிவு தெளிந்த நாள் முதற் கொண்டு தேடிக் கொண்டிருக்கின்றான். காலம் காலமாய் பெயர் ஒன்றில்லாத மெய்ப்பொருளை, உயிர்ப்பாற்றலை கடவுளை ஆயிரம் பெயர்கள் கொண்டும் இடைவிடாமல் தேடிக் காணாது திகைக்கின்றான்.

- பட்டினத்தார் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகல் தீவட்டி

அருள்நந்தி, மெய்கண்டார், மறைஞான சம்பந்தர், உமாபதி சிவம் என்ற நால்வரும் சந்தான குரவர் எனப்படுவர்.

இவர்களில் உமாபதி சிவம் மறைஞான சம்பந்தரிடம் மாணாக்கராக அமைந்தது ஒரு சிறப்பான சம்பவம். மறைஞான சம்பந்தர் பராசரிஷி கோத்திரத்தில் வந்த ஓர் அந்தணர். உமாபதிசிவம் சிதம்பரத்தில் நடராசரைப் பூசை செய்து கொண்டிருந்த ஆசாரியர். இவர் தீட்சிதர் அல்லர். இவர் காலத்தில் தீட்சிதர் கிடையாது.

உமாபதிசிவம் வேதங்களில் வல்லவர். ஆகமங்களிலும் வல்லவர். சைவசித்தாந்தங்கள் பல செய்திருக்கிறார். சேக்கிழார் வரலாற்றையும் நம்பியாண்டார்நம்பி வரலாற்றையும் சிதம்பரத்திற்குத் தலபுராணமாகக் கோயிற் புராணத்தையும் பாடியிருக்கிறார். சைவசமயத்திற்குத் தமிழ் மூலமாயும் சமஸ்கிருத மூலமாயும் மகத்தான சேவை செய்திருக்கிறார்.

அக்கால வழக்கப்படி இவர் சிவிகையிலேயே ஏறிச் செல்வது வழக்கம். அப்படிப் போகும் போது காளம் ஊதும். ஆலவட்டம், குடை, தீவட்டி முதலியவை உடன் செல்லும். இப்படி இவர் பெரிய கல்விமானாகவும் ஆசிரியராகவும் விளங்கிய காலத்தில் ஞானப்பக்குவம் பெறவில்லை என்று தெரிகின்றது. ஒரு சமயம் இவ்விதம் சிவிகையில் சென்ற போது முன் சொன்ன மறைஞான சம்பந்தர் ஒரு தெருவில் பிச்சை ஏற்று வந்து கொண்டிருந்தார்.

அப்போது அங்கு சாலிய மக்கள் பாவு இழுத்துக் கட்டி அதற்கு கஞ்சி போட்டுக் கொண்டிருந்தார்கள். மறைஞான சம்பந்தர் பரஞானம் கைவரப் பெற்ற ஒப்பற்ற ஞானி. சாலியர் என்றும் பாவு என்றும் கஞ்சி என்றும் வேற்றுமை அறியாதவர். உடன் பல மாணாக்கர் வந்து கொண்டிருந்தார்கள். இவர் நூற்பாவின் அருகே சென்று தலைக்கு கொஞ்சம் கஞ்சி வார்க்கும்படி இருகைகளையும் குவித்து ஏந்தினார்.

அதேநேரம் அந்த இடத்திற்கு உமாபதிசிவத்தின் சிவிகை வந்தது. திருவருட் செயலால் இவர் அந்தச் சிவிகையை நோக்கினார். "பட்ட கட்டையில் பகற்குருடன் போகிறான் பாருங்கள்" என்று சொன்னார். இந்தச் சொற்கள் உமாபதியின் காதில் விழுந்தன. சிவிகையிலிருந்து குதித்தார். மறைஞான சம்பந்தரின் பின் ஓடோடி வந்தார். அவர் கஞ்சி பெற்றுக் குடித்துக் கொண்டிருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறைஞான சம்பந்தர் முழங்கை வழியாகக் கஞ்சி வழிந்துகொண்டிருந்தது. அதைத் தம் கையில் ஏந்தி உமாபதி பருகினார். சாலியருடைய கஞ்சி என்ற எண்ணமெல்லாம் அவருக்கு உதிக்கவில்லை.

குருவின் பரிகலசேடம் என்ற ஓர் உணர்வே ஓங்கி நின்றது. அந்தக் கணமே அவர் மறைஞான சம்பந்தரைக் குருவாகக் கொண்டார். இது நடந்த காலம் 1300ம் ஆண்டில்

ஞானிகளுக்குக் குலம் கோத்திரம் இடம் சாதி என்ற எண்ணம் எப்போதுமே இருந்ததில்லை. இந்த உமாபதிசிவம் சைவர்களுடைய பரமாசாரியார்களில் நான்காம் ஆசாரியர்.

ந. சிவநாதம் ( புத்தொளி )
ஆனைக்கோட்டை.

## நாம் செய்ய வேண்டியது

எமது சமயத்திற்கென சிறந்த பண்பாடுகளும் பாரம்பரியங்களும் காணப்படுகின்றன. இவற்றைக் கடைப்பிடித்து வாழ்ந்ததினால் எமது வாழ்க்கை அமைதியாகவும், நிம்மதியாகவும் விளங்கியது. இதனால் இத்தகைய நல்ல பண்புகளை எங்களிடமிருந்து மற்ற இனத்தவர்கள் பெற்று அவற்றைப் பேணிப்பாதுகாத்து வருகின்றனர். ஆனால் நாங்கள் பெற்றோரை வணங்குதல், குருவை மதித்தல், பெரியோரைக் கனம் பண்ணுதல் போன்ற பண்புகளைக் கடைப்பிடிக்கத் தவறுகின்றோம். இதனால் எமது வாழ்க்கை என்ற பயணத்தில் குழப்பமும், தடுமாற்றமும் ஏற்படுகின்றது. அத்துடன் நாம் எங்கே போய்க் கொண்டிருக்கின்றோம் என்று தெரியாது எமது வாழ்க்கைப் பயணத்தைச் செலுத்திக் கொண்டிருக்கின்றோம்.

மயில்வாகன சுவாமிகளின் 13வது குருபூசைத் தினத்தில்
நல்லை ஆதீன முதல்வர் ஆற்றிய உரையிலிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஸ்வரூபம்

மகாபாரதத்திலே பாரதப்போரை எவ்வாறு நிறுத்தலாமென்று சகாதேவனிடத்திலே கண்ணன் ஆலோசனை கேட்டபொழுது அதற்கு யதார்த்த ரீதியாக பாஞ்சாலியின் கூந்தலை வெட்டுதல் போன்ற பல வேறு ஆலோசனைகளைக் கூறிய சகாதேவன் இறுதியில் கண்ணபரமாத்மாவைப் பார்த்து இவ்வளவையும் செய்த பின்பு இறுதியில் உம்மையும் கட்டிவைத்தால்தான் பாரதப்போரை நிறுத்தலாம் என்று கூறினான். (ஏனென்றால் எப்படியும் பாரதப்போரை நடாத்தியே தீரவேண்டும் என்பதில் சூத்திரதாரியாக கண்ணனே செயற்படுகின்றான் என்பது அவனுக்கு தெரியும்) அப்பொழுது என்னை நீ கட்டுவாயா என்று சகாதேவனைப்பார்த்து கண்ணன் கேட்டபொழுது ஓம் உன்னைக் கட்டுகிறேன் என்று கூறி அவனைக்கட்ட முற்பட்டான். ஆம் அன்பு என்னும் கயிற்றினால் கட்ட முற்பட்டான். கண்ணபிரான்மீது தனக்குள்ள அன்பை வெளிப்படுத்தி மழை பொழிவது போல தொடர்ச்சியாக அவனைப் புகழ்ந்து அவனது சிறப்பை சொற்பதங்களால் அடுக்கிக் கொண்டே போனான். அப்பொழுது சகாதேவனுடைய அன்பின் ஆழத்தை பொறுக்கமுடியாமல் அவனுக்கு தனது விஸ்வரூபத்தைக் காட்டிய போதும்! சகாதேவா நிறுத்து! நிறுத்து! என்னைக்கட்டியது போதும் என்று கண்ணபரமாத்மா கூறினார் — இது அன்பிற்குகிடைத்த விஸ்வரூபம்.

துரியோதனனுடைய சபையிலே பஞ்சபாண்டவரின் தூதுவனாக வந்த கண்ணபிரானை வஞ்சகமாகப் பாதாளத்தில் வீழ்த்தி மல்லர்களை வைத்து கொல்வதற்கு சதித்திட்டம் தீட்டி அதனைச் செயற்படுத்திய பொழுது பாதாளத்திலிருந்து விஸ்வரூபம் எடுத்து சபையிலுள்ள அனைவரும் நடுங்கும் வண்ணம் தனது உருவத்தைக் காட்டினார். இது துரியோதனாதியோரை எச்சரித்து அவர்களுக்குள்ள ஆபத்தை வெளிப்படுத்த எடுத்த விஸ்வரூபம்.

பாரத யுத்தத்திலே வயது முதிர்ந்த பிராமணனாகச் சென்று கர்ணனுடைய தர்மத்தை கொடையாகப் பெற்றபின் அந்த கர்ணனுக்கு தனது விஸ்வரூபத்தை கண்ணன் காட்டினான். இது கர்ணனுடைய கொடையின் சிறப்பையும் பெருமையையும் காட்டுவதற்கு எடுத்த விஸ்வரூபம்.

கந்த புராணத்திலே முருகப்பெருமான் சூரபத்மனுக்கு காட்டிய விஸ்வரூபம் சூரபத்மனுடைய அகங்காரத்தை அடக்குவதற்கான விஸ்வரூபமாகும்.

( யாழ். பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி சண்முகதாஸ் அவர்கள்
1998 உற்சவகால சொற்பொழிவில் ஆற்றிய உரையிலிருந்து. )




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுப்பிரமணிய அனுபூதி

குருவே நமக

## சுப்பிரமணியர் யந்திர சக்கரம்

உபாஸனம்



மூலமந்திரம்:- ஓம் - ஸ்ரீம் - ஐயும் - கிலியும் - ஸௌம் - பௌவும்
சரவணபவ தேவாயநமக!

உச்சாடனம் (ஒரு லட்சம் தரம் செபித்தல்)

சுக்கில பட்ச ஷஷ்டியில் காலை, மாலை, ஸ்நானம் செய்து பட்டு வஸ்திரம் கட்டி விபூதி தரித்து அனுஷ்டானம் முடித்து மான்தோலாசனத்தில் தெற்கு முகமாய் இருந்து மேற்கண்ட யந்திரத்தை செப்புத் தகட்டில் வரைந்து பால், தேன், இளநீர், சந்தன, அபிஷேகம் செய்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசனப்பலகையிட்டு அதில் சிவப்புப்பட்டு விரித்து அதன்மேல் சக்கரத்தை வைத்து விபூதி, குங்குமம், சந்தனம், புனுகு, சவ்வாது, மல்லிகை அல்லது பிச்சி, கடம்புசாத்தி, தீபம் ஏற்றி வைத்து வாழையிலையில் வெற்றிலை, பாக்கு, தேங்காய், பழம், வடை, பாயசம் பால் வைத்து கற்பூரம், சாம்பிராணி தூபதீபம் கொண்டு பூசித்து அடியிற் கண்ட பாடலைப் பிழையின்றி ஒரு தரம் சொல்லி 1008 தரம் மூலமந்திரம் நாள் ஒன்றிற்கு ஓதி உருத்திராக்கம் கொண்டு செபித்து முடியும் வரை ஆசாரமாக இருந்து அறுபது நாள் ஒரு வேளை விரதமனுஷ்டிக்க, சத்துரு ஜெயம், சகல காரியசித்தி, இஷ்ட காமியங்கள், பூதம், பசாசு, மோகினி, டாகினி, இசைக்கி முதலிய துஷ்ட தேவதை பிடித்தவர்களிற்கும், கடவிருந்து, கிரகதோஷம், கண் திருஷ்டி, நாத்தலைவலி, குழந்தைப்பிணி, சித்தியாகும். பின் 108 தரம் செபித்த விபூதி, தீர்த்தம் கொடுத்து பூசி தெளித்துப் பருகிவர சாந்தமாகும். இது கைகண்ட அனுபவம்.

மேற்கண்ட முறையில் செய்ய முடியாதவர்கள் நல்ல குருவைக் கொண்டு செய்விக்கலாம். அல்லது அவர்மூலம் தீட்சை வைத்துச் செபிக்கலாம். எத்தெய்வத்திலாவது நாம் அனுபூதியையும், அனுக்கிரகத்தையும் பெறவேண்டும். இன்று தெய்வத்திடம் அனுபூதி பெறாமல் பல தெய்வ வழிபாடு செய்கின்றார்கள். எப்பொழுதும் நாம் தம்முடைய குலதெய்வத்தையும் அதன் கடமையையும் விடக்கூடாது. குலதெய்வ அனுபூதி பெற்றவனே ஏனையவர்க்கு அனுபூதி சித்தி வழங்க முடியும்.

இன்று பல குருக்கள், பூசாரி, பட்டர், ஆசாரசீலர் என்று சொல்லப்படுபவர்கள் தாம் பூசை செய்யும் மூலமூர்த்தியை மறந்து பொருளுக்காகவும், வேறு தேவைக்காகவும், உடலுறவிச்சைக்காகவும், சுயதேவைக்காகவும் உலக சமூகப்புகழுக்காகவும் செயற்படுவதனால் கோவில்களை எல்லாம் வியாபார நிலையங்களாகவும், வர்த்தக வஞ்சகமுள்ள நிலையங்களாகவும் மாறும் அவல்நிலையில் ஆக்கியுள்ளார்கள். இந்தக்கேடுகள் நடைபெறும் காலத்திலேதான் "ஞானச்சுடர்" உதயமாகி பெயரே சொல்லப்பட்ட சுப்ரமணிய அனுபூதியைப் பெற உகந்த இடமாகியமைவது போற்றத்தக்கது எப்படி என்றால் முருக வழிபாடு வடமுகமே சிறந்தது எனச் சோதிட விற்பன்னர்கள் கூறுகிறார்கள்.

அந்த வகையில் வடமுகமாக அடியார்கள் ஆசாரசீலர்களாக அமைத்து முருகப் பெருமானின் அனுபூதியைப் பெற சந்நிதியான் ஆச்சிரமம் முருகன் கோவிலுக்கு நேரே தெற்குப் பக்கத்திலே வடமுகமாக அமைந்திருப்பது நோக்கத்தக்கதாகும். எனவே, ஆன்மீகப்பயணம் செய்யும் அடியார்களிற்கும், சுப்ரமணிய அனுபூதியைப் பெற விரும்புவோர்க்கும் சந்நிதியான் ஆச்சிரம அமைப்பு சாலப் பொருத்தமாகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே, பல ஞானிகள் ஆசாரசீலர்கள் தோன்றுவதற்கு வழிசமைத் திருப்பது ஆன்மீகப் பணிகளுக்கு அருமையாக விளங்கும். எனவே, முதலில், சுப்பிரமணியர் யந்திரத்தை அமைத்து மூலமந்திரத்தைச் செபித்து தென்முகமாக இருந்து கீழே தரும் பாடலையும் பிழையின்றிப் படித்துத் திருவருள் பெறுவீர்களாக.

## முருகன் துதி

சரவண பவனெனச் சங்கரியின்
சண்முக ரீங்கார ஓங்கார
சமயசார ஞானியப் புதல்வனே முருகா
இத்திராஞ்சுடு துரி சோணைச்
சரவண பவனென ஐயங்களும் துதிக்க
சரியை, கிரியை, யோக, ஞானச்
சதங்கைகள் காலில் கொஞ்சிடவே மயில்போல்
நாண்டியே சக்தி வேலெடுத்து
சரவண பவனென சடைபயே வந்தாயிச்
சல்ரம் ஓறல் வெளணிலைக்
சால பல், வல், வள், கிளி, பொனாகவும்
சாந்துவே பிம்பி கணனைத்தும்
சரவண பவனென துன்னை துன்னை விரித்து
தரித்திடச் யுனை தெரியாமல்
சங்குங் அங்கிளை சடுதியால் வருவாய்
சண்முக சரவண பவனே.

இங்ஙனம்
தி. சோமாஸ்கந்தராஜாக் குருக்கள்

### கடவுள் நம்பிக்கை

தத்துவ ஞானம் எது பேசினும் பேசுக. பிரமாணவாதம் எதனைக் கொள்ளினும் கொள்ளுக! உலகிலே மரணம் என்பது இருக்கும் வரையும் மனித இதயத்திலே பலவீனம் இருக்கும் வரையும், அந்த பலவீனத்தாலே மனிதனுடைய இதயத்திலிருந்து அழுகுரல் வரும்வரையில் ஆண்டவனிடத் தில் நம்பிக்கை இருந்தே தீரும்.

- சுவாமி விவேகானந்தர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவயோகியின் தமிழ் மந்திரம்

இந்து சமயத்தில் காலத்துக்குக் காலம் பக்தர்கள், சித்தர்கள், ஞானிகள், எனப் பலர் தோன்றி எமது சமயத்தை வளப்படுத்தினார்கள். நாயன்மார்கள், ஆழ்வார்கள், வடநாட்டு பக்திநெறியாளர்கள் போன்றோர் பக்தர்களாகவும்; சங்கரர், இராமானுஜர், மத்துவர், மெய்கண்டார் போன்றோர் தத்துவ ஞானிகளாகவும், பதினெண் சித்தர்கள், நவநாத சித்தர்கள், ஈழத்துச் சித்தர்கள் போன்றோர் சித்த புருஷர்களாகவும் திகழ்ந்தார்கள். தவயோகி திருமூலநாயனார் சித்த புருஷர்கள் அனைவருக்கும் மூலவராய்த் திகழ்ந்தார். இதனைத் தாயுமான சுவாமிகள் "மூலன் மரபில் வந்த வித்தகச் சித்தர் கணமே" எனத் தனது பாடலில் குறிப்பிடுகின்றார். சித்த புருஷர்கள் அட்டமா சித்திகளும் கைவரப் பெற்றவர்களாகத் திகழ்ந்தார்கள். "கடவுளைக் காண முயல்பவர்கள் பக்தர்கள் என்றும் கடவுளைக் கண்டு தெளிந்தவர்கள் சித்தர்கள்" என்றும் சித்தர்களுக்கு வரைவிலக்கணம் கூறப்பட்டுள்ளது. "எழும்பாமல் வாசனையைக் கொன்றோன் ஞானி ஏகாமல் வாசனையை அடித்தோன் சித்தன்" எனச் சட்டைமுனிச் சித்தர் ஞானிகளுக்கும் சித்தர்களுக்கும் இடையேயுள்ள வேறுபாட்டை விளக்குகிறார், வாசனை என்பது கர்ம வினை ஆகும். பிரபஞ்சவாழ்வின் இரகசியத்தை சித்தர்கள் அறிந்திருந்தார்கள். சித்தர்கள் உலகத்தில் வாழ்ந்தாலும் உலகாயதராக வாழமாட்டார்கள். இவர்கள் உலகத்தோடு ஒட்டியும் ஒட்டாமலும் வாழ்ந்து வருவார்கள்.

திருமூலர் திருக்கைலாயத்தில் சுந்தரநாதன் என்ற இயற்பெயருடன் நந்தி தேவரின் மாணவராக இருந்து வந்தார். அகத்திய முனிவரைக் காண்பதற்காக தமிழ்நாட்டுக்கு வந்த தவயோகி காவிரி நதிக்கு அருகில் இருக்கும் சாத்தனூர் என்ற கிராமத்தை அடைந்தார். இங்கே பசுக்களை மேய்த்துக் கொண்டிருந்த மூலன் ஆகிய இடையன் சடுதியாக இறந்து விட்டான். தனது எஜமானனைச் சூழ இருந்து கண்ணீர் வடித்த பசுக்களின் வேதனையைக் கண்ட தவயோகி தான் திருக்கைலாயத்திலே கற்ற கூடு விட்டுக் கூடுபாயும் வித்தையைப் பயன்படுத்தி தனது உயிரை மூலனுடம்பில் புகுத்தி எழுந்தார். மூலன் ஆகிய இடையனின் உடம்பிற்குள்ளே புகுந்தார். திருமூலர் என்ற பெயரைப் பெற்றார்.

இடையனின் மனைவி பசுக்கூட்டங்களுடன் வீடு திரும்பிய தவயோகியாகிய திருமூலரை எதிர்கொண்டு அன்புடன் வரவேற்றாள். பசுக்கள் படும் துன்பத்தைத் துடைக்க திருமூலர் விரும்பினாரே ஒழிய இடை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யனின் மனைவியின் அழைப்பை ஏற்க அவர் தயாராக இல்லை. காலையிலே வீட்டிலிருந்து புறப்பட்ட இடையன் வேறு, மாலையிலே அவனுடைய உடம்பினுள்ளே புகுந்து வந்திருக்கும் தவயோகி வேறு என்பதை அறியாத இடையனின் மனைவி சஞ்சலமுற்றாள். தனது கணவருக்கு பித்தும் கொதித்ததோ? பேய் பிசாசு பிடித்ததோ? சித்தம் கலங்கியதோ? ஏன் அவர் நிலைமாறி நிற்கின்றார் என வேதனைப்பட்ட இடையனின் மனைவி ஊரில் உள்ள பெரியவர்களிடம் தனது துன்பத்தை முறையிடுகின்றாள். அவர்கள் சிவபோகப் பேரின்பத்தை புசித்திருந்த மகாஞானியை கேசாதி பாதமாக உற்று நோக்கினார்கள். அவருடைய தெளிந்த சிவயோக நிலையை இடையனின் மனைவிக்கும் உணர்த்தினார்கள். இதனைச் சேக்கிழாரின் பெரியபுராணப் பாடல் பின்வருமாறு விளக்குகிறது.

> பித்துற்ற மயலன்று பிறிதொரு சார்புளதன்று
> சித்தவிகற்பம் களைந்து தெளிந்த சிவயோகத்தில்
> வைத்த கருத்தினராகி வரம்பில் பெருமையிலிருந்தார்
> இத்தகைமை அளப்பரிதால் யாராலும் என உரைப்பார்.

தவயோகி திருமூலர் திருவாவடுதுறையில் உள்ள அரசமரத்தடியில் யோக நிஷ்டையில் தியானத்தில் அமர்ந்தார். மூவாயிரம் ஆண்டுகள் வாழ்ந்த இவர் ஆண்டுக்கொருமுறை கண் விழித்தபோது கூறிய ஆப்த வாக்கியங்களே திருமந்திரம் ஆகும். தமிழ் ஆகமம் என்று திருமந்திரம் போற்றப் படுகிறது. இது தமிழிலுள்ள ஒப்பற்ற சாத்திர நூலாக இருப்பதோடு முக்திக்கு வழிகாட்டும் பெருஞானக் களஞ்சியமாகவும் உள்ளது. திருமூலநாயனாரைப் போற்றித் திருமந்திரத்தைப் பற்றிச் சிந்திப்பவர்களுக்கு பிறவி நோய் இல்லை என்பதை 'திருமூலர் தேவனையே சிந்தை செய்வோர்க்கு கருமூலம் இல்லையே காண்' என்று பாடல்வரிகள் விளக்கி நிற்கிறது. திருமந்திரம் ஒன்பது தந்திரங்களாகப் பிரிக்கப்பட்டு உள்ளது. சிவாகமங்கள் இருபத்தெட்டில் காரணாகமம் முதல் மகுடாகமம் வரையுள்ள ஒன்பது ஆகமங்களின் சாரத்தை திருமந்திரத்தில் காணலாம் என்பர்.

(தொடரும் ....

சிவத்தமிழ் வித்தகர் சிவ. மகாலிங்கம்
(விரிவுரையாளர், பலாலி ஆசிரியர் கலாசாலை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்நிதியான் கருணை

கடவுளை நம்பினோர் கைவிடப்படார் என்பது முதுமொழி. ஆத்மீக நம்பிக்கையுள்ள அருளாளர்கள் தாம் பெற்ற அனுபவத்தை ஆதாரமாகக் கொண்டு எமக்கு விட்டுச் சென்ற பொக்கிஷமே இந்த முதுமொழியாகும். ஆனால், விஞ்ஞான முன்னேற்றத்தினாலும் வேறு பல காரணங்களாலும் வாழ்க்கை முறையிலும வாழ்க்கையின் நோக்கங்களிலும் மாற்றங்கள் ஏற்பட்டுச் செல்வதால் இறைநம்பிக்கையும் இறைவழிபாடும் அருகிக் கொண்டு போகின்றனவோ என்று கவலைப்பட வேண்டிய சூழ்நிலையும் எம்மத்தியிற் காணப்படுகின்றது. இத்தகைய சூழ்நிலைகளிற் கூட உண்மையான இறைநம்பிக்கை உள்ளவர்களது வேண்டுதல்கள் நிறைவேற்றப்படுகின்றன என்பதற்கு மைதிலி கருணாவேல் குடும்பத்திற்கு நடைபெற்ற பின்வரும் சம்பவம் ஒர் உதாரணமாக விளங்குகின்றது.

திருமதி மைதிலி கருணாவேல் பலாலி வீதி, கோண்டாவில் கிழக்கில் தனது தாயாருடன் வசித்து வந்தார். இவருடைய கணவன் திரு. கருணாவேல் அவர்கள் லண்டனில் வேலை செய்து கொண்டிருந்தார். இருவரும் முருகனுடைய பக்தர்கள். திருமதி மைதிலி கருணாவேல் அவர்கள் லண்டனுக்குச் சென்று தனது கணவனுடன் இணைந்து வாழ வேண்டுமென்று நினைத்தாலும் பல்வேறு காரணங்களால் அவர் லண்டனுக்குச் செல்கின்ற நோக்கம் நிறைவேறவில்லை. லண்டனில் உள்ள கணவர் கருணாவேல் தனது மனைவியை லண்டனுக்கு அழைப்பதற்குப் பல முயற்சிகள் எடுத்தும் அவை எதுவும் கைகூடவில்லை. இந்த நிலையில் இருவரும் முருகப்பெருமானையே தமக்குத் தஞ்சமென நினைந்து தமது குறையை முறையிட்டுத் தாம் இருவரும் இணைந்து வாழ்வதற்குக் கருணை காட்டுமாறு உள்ளம் உருகி வழிபட்டுக் கொண்டிருந்தனர். அத்துடன் திருமணமாகி நீண்ட காலமாகியும் தமக்குக் குழந்தை பிறக்காதிருந்த குறையும் தீரவேண்டும் என்றும் வேண்டிக்கொண்டனர்.

1988 ஆம் ஆண்டு ஒரு நாள் சுவாமி ஒருவர் பலாலி வீதி கோண்டாவில் கிழக்கில் உள்ள மைதிலி கருணாவேல் அவர்களது வீட்டிற்கு வருகை தந்தார்கள். சுவாமிகள் மைதிலி கருணாவேல் அவர்களைப் பார்த்து,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'' இருபிள்ளைகள் என்னை நினைந்து வருந்துகிறார்கள். உனது கவலை தீரும். நீ நினைப்பது நடக்கும் என்று கூறி எனக்குக் காவி வேட்டியும் சால்வையும் மட்டும் தந்தால் போதும் என்று குறிப்பிட்டார். அத்துடன் தனது விலாசம் நடராஜகோபால் ஆனந்தாச்சிரமம் கல்லிபுர ஆழ்வார் தொண்டைமானாறு. ''

என்றும் கூறிச்சென்றார்.

இதன்பின்பு சிறிது காலத்தில் மைதிலி கருணாவேல் அவர்கள் லண்டனில் தனது கணவனிடம் சென்றடைந்தார். அது மட்டுமல்ல முருகப் பெருமான் அருளால் ஒரு ஆண்குழந்தையும் அங்கே பிறந்தது. இவ்வாறு பிரிந்திருந்த குடும்பம் ஒன்று சேர்ந்து அக்குழந்தையும் கிடைத்து குடும்பத்தில் மட்டற்ற மகிழ்ச்சி ஏற்படுவதற்குக் காரணமாக அமைந்த ஆற்றங்கரை முருகனின் அருளை நினைத்து ஆனந்தபரவசம் அடைந்தனர். அத்துடன் சாமியார் கேட்டுக்கொண்டபடி காவிவேட்டியும் சால்வையும் புதிதாக வாங்கி அவற்றைச் சாமியாருக்குக் கிடைக்கச் செய்வதற்கான நடவடிக்கைகளிலும் ஈடுபட்டனர். ஆனால் அப்படியான ஒருவர் குறிப்பிட்ட விலாசத்தில் இல்லை என அவர்களுக்குப் பதில் கிடைத்தது. ஆனால், அதேநேரம் லண்டனில் உள்ள முருகன் கோயிலில் இதேபோன்ற ஒரு சாமியாரைக் கண்டதனால் அவர்கள் மனம் மகிழ்ந்து அவரிடம் இவ்வாறான ஒரு வேட்டி சால்வையைக் கொடுப்பதற்காகப் புதிதாக வாங்கி அந்தக்கோயில் நிர்வாகத்தினரிடம் அங்கேயுள்ள சாமியாரிடம் கையளிப்பதற்காகக் கொடுத்தனர். என்ன ஆச்சரியம் அதன்பின் லண்டன் முருகன் கோயிலிலும் அந்தச் சாமியாரைக் காணமுடியவில்லை.

ஏறத்தாழ ஒரு மாதத்திற்கு முன்பு மைதிலி அவர்களுடன் லண்டனில் வசித்துக் கொண்டிருந்த அவரது தாயார் யாழ்ப்பாணம் வந்திருந்தார்கள். 75/9 மூன் ஒழுங்கை, பலாலி வீதி, திருநெல்வேலி என்ற வீட்டு விலாசத்தில் தங்கியிருந்தார். அவ்வாறு தங்கியிருக்கும் பொழுது நேரடியாக சந்நிதியான் ஆச்சிரமத்திற்கு வருகை தந்து மேற்குறிப்பிட்ட விடயங்கள் அனைத்தையும் தெளிவு படுத்தினார்கள். மேலும் திருநெல்வேலி வீட்டிலிருந்து ஆச்சிரமத்திற்கு புறப்படும் பொழுது ஏற்கனவே பாக்ஸ் மூலம் அனுப்பியிருந்த அந்த சாமியாரின் விலாசத்தை மைதிலியின் தாயார் எடுத்துப் பார்த்த பொழுது அந்த பாக்ஸ் கடிதத்தில் விலாசம் அழிந்திருப்பதும் அவதானிக்கப்பட்டது. இதுவும் ஆச்சரியப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படும் நிகழ்ச்சியாகவே உள்ளது. அவ்வாறு அறிந்திருந்த பாக்ஸ் கடிதத்தையும் எமக்குக் காண்பித்தார்கள். அத்துடன் சாமியாருக்குக் கொடுப்பதற்கென ஏற்கனவே வாங்கி வைத்திருந்த காவிவேட்டியையும், சால்வையும் ஆச்சிரமத்தில் ஒப்படைத்துள்ளார்கள். இவ்வாறு தங்களது குடும்பத்தில் முருகப்பெருமானுடைய திருவிளையாடல் தொடர்ந்து கொண்டே போவதைக் குறிப்பிட்டு ஆனந்தக்கண்ணீர் சொரிந்தார்கள்.

கற்கண்டின் சுவை அதனைச் சுவைத்தவர்களுக்குத்தான் தெரியும். அதேபோல கலியுகத்தில் கந்தப்பெருமானுடைய அருளின் சிறப்பையும் அதனை அனுபவித்தவர்கள்தான் நன்கு அறிவார்கள். அதிலும் ஆற்றங்கரை முருகனை நாடியும் அவனை நினைத்தும் உள்ளம்உருகி வழிபடுகின்ற அடியவர்களுக்கு அவன் அருளை அள்ளிவழங்குவது மட்டுமன்றி அவர்களை நாடிவந்து அவர்களின் குறையைப் போக்குகின்றான் என்பதையும் மேற்படி நிகழ்வு எமக்கு விளக்குவதாக உள்ளது. ஆம் ஆற்றங்கரை முருகனின் அருளையும் அதன் சிறப்பையும் அறிவதற்குகூட எமக்கு திருவருள் கைகூட வேண்டும்.

ஓம் முருகா!

ந. அரியரத்தினம்
தொண்டைமானாறு

குறிப்பு:- சந்நிதி முருகப் பெருமானுடைய இவ்விதமான அற்புத நிகழ்வுகள் தொடர்ச்சியாக ஒவ்வொரு மலரிலும் வெளிவரவுள்ளது. இவ்வாறான அற்புத நிகழ்வுகளை அனுபவித்த அன்பர்கள் தகுந்த ஆதாரத்துடன் விளக்கமாக குறிப்பிட்டு மலர்க் குழுவிற்கு அனுப்பினால் அவற்றையும் இத் தொடரில் இடம் பெறச் செய்யலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் நாவல் இலக்கியம்

நவீன யுகத்தின் வலிமை மிக்க ஒரு பேரிலக்கிய வடிவமான நாவல் தோன்றி ஒரு நூற்றாண்டும், இரண்டு தசாப்தங்களும் கடந்து விட்டன. இக் குறிப்பிட்ட காலப் பகுதிக்குள் அது பெற்று வந்துள்ள பரிமாணங்களும் பல்வேறு துறைகளில் விளைவித்துள்ள தாக்கங்களும் இலக்கியத்தில் முதன்மை ஆனவை. ''வசன வடிவிலே குறிப்பிடத்தக்களவு நீளமுடையதாகவும், புனைந்துரைக்கப்படுவதாகவும் பாத்திரங்களின் பண்புகளையும் செயல்களையும் வாழ்க்கையிலே உள்ளபடியே இயல்பான கதைப் பொருளில் அமைத்து அவற்றின் உணர்ச்சி மோதல்களைச் சித்திரிப்பதாகவும் அமைவது நாவல்'' என்று சிலர் நாவலுக்கு வரைவிலக்கணம் கூறுவர். இத்தன்மையான நாவலிலக்கியம் தமிழில் தோன்றியதற்கான பின்னணி என்ன என்பது ஆராயப்பட வேண்டிய அவசியமாகின்றது.

ஆங்கில ஏகாதிபத்தியத்தின் கீழ் மேல்நாட்டுப் பண்பாட்டுத் தாக்கத்தினால் தேசிய பாரம்பரிய நிலவுடைமைச் சமூக அமைப்பு நிலை தளர்ந்து முதலாளித்துவ சமூக அமைப்பு வளர்ந்து கொண்டிருந்தது. ஆங்கிலக் கல்வியினால் ஆங்கில மொழியை நன்கு கற்றவர்கள் அம் மொழியில் பயின்று வந்த நாவல் இலக்கியத்தைத் தமிழிலே அறிமுகப் படுத்த நினைத்தனர். இதே சமயம் நூல்களைப் பல்லாயிரக் கணக்கில் உற்பத்தி செய்யும் யந்திர வசதி, நூல்களைப் படித்து இன்புறத்தக்க கல்வி அறிவு, பரந்துபட்ட வாசகர் கூட்டம், மத்தியதர வகுப்பினரின் தோற்றம், போதிய அளவிலான ஓய்வு நேர வசதி கிடைத்தமை, என்பன நாவல் இலக்கியத்தின் பின் புலமாக அமைந்தன. சற்று விளக்கமாக நோக்கின் தாய் வருந்திப் பெற்ற நாகரிகமான ஆங்கிலக் கல்வியும் அதன் பயனாகப் பெற்ற துரைத்தன உத்தியோகமும் இக் காலத்தில் ஒருவரைக் கனவான் ஆக்கின. இம் மத்திய தரவர்க்கத்தினர் சாதி நிலவுடைமை ஒருவரின் முன்னேற்றத்திற்கு உதவாது என்பதனையும் தம்மைச் சுற்றியுள்ள சமுதாயச் சட்டங்களும் நடைமுறைகளும் காலத்திற்கு ஒவ்வாதன என்பதையும் சமூகச் சீர்திருத்தம் அவசியம் என்பதையும் உணர்ந்தனர். இத்தகைய சூழ்நிலையிலே புதிய எண்ணங்கள், புதிய கருத்துக்கள், புதிய இலட்சியங்கள் ஆகியவற்றைப் புலப்படுத்த நாவலை ஒரு இலக்கிய வடிவமாகக் கொண்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழில் முதல் நாவலாசிரியரான மாயூரம் வேதநாயகம்பிள்ளை தனது பிரதாப முதலியார் சரித்திரம் என்ற நூலின் முன்னுரையில் தமிழ் உரைநடை நூல்கள் இல்லை என்ற குறையைப் போக்குவதற்காகவும் தமது செய்யுட்களின் கருத்துக்களுக்கு கதைவடிவில் எடுத்துக்காட்டு நல்குவதற்காகவுமே எழுதியதாகக் குறிப்பிடுகின்றார். இவரது நாவல் உயர்ந்த பூரண நற்குணம் படைத்தவர்களையே பாத்திரங்களாகக் கொண்டிருந்தது. நாவல் வசனவடிவில் அமைந்த காவியம் என்ற கருத்து இவருக்கு இருந்தது என்பதை இவரது கதாபாத்திரமான ஞானாம்பாள் கூற்றில் இருந்து உணரலாம். நாவலிலக்கியத்திற்கு முக்கிய அம்சங்களான சமூகக்களம், பாத்திரப்படைப்பு, மொழிநடை என்பவற்றில் இவர் கவனம் செலுத்தியதாகத் தெரியவில்லை. ஈழத்திலும் முதன்முதலாக எழுந்த அசன் பேயின்கதை, ஊசோன் பாலந்தைக்கதை அறநெறிப் பிரச்சாரங்களாக அமையும் சம்பவக் கலவைக் கதைகளாகவே இருந்தன. இதன் பின்னர் இராஜமையரும், மாதவையாவும் தாம் வாழ்ந்த காலச்சமுதாயத்தை நோக்கி தாம் பெற்ற அனுபவங்களை இயற்பண்புகளுடன் சித்திரிக்க முயன்றதைக் கமலாம்பாள் சரித்திரத்திலும் பத்மாவதி சரித்திரத்திலும் காணக் கூடியதாக உள்ளது.

நாவலிலக்கிய வளர்ச்சியில் அடுத்த காலகட்டப்பகுதியில் தோன்றிய, நாவல்களை துப்பறியும் நாவல்கள், சரித்திர நாவல்கள், சமூகநாவல்கள், மொழிபெயர்ப்பு நாவல்கள் என வகைப்படுத்தி ஆராயலாம். துப்பறியும் நாவல்கள் எழுதுவதில் ஆரணி குப்புசாமி முதலியார், வடுவூர் துரைசாமி ஐயங்கார் இவர்களது வழியில் சங்கர்ராம் போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். கானன்டொயின் ஷெர்லொக் ஹோம்ஸ் போன்ற ஆங்கில நாவலாசிரியர்களைப் பின்பற்றியே இவர்களது நாவல்கள் எழுதப்பட்டிருந்தன. ஆங்கில மொழியில் சேர் வால்டர்ஸ்காட் என்பவர் சரித்திர நாவல்கள் எழுதிப் பிரபல்யம் பெற்றிருந்தது போல அவரது வழியிலே தமிழ் சரித்திர நாவல்களின் தந்தை என அழைக்கப்படும் கல்கி பல நாவல்களை எழுதினார். பார்த்திபன் கனவு, பொன்னியின் செல்வன், சிவகாமியின் சபதம் என்பன குறிப்பிடத்தக்கனவாகும். தமிழ் நாட்டின் பல வரலாற்றுச் சம்பவங்களை தனது துள்ளும் தமிழ் நடையினால் வளம்படுத்தியவர். கல்கியின் வழியைப் பின்பற்றி தி. நா. சுப்பிரமணியன் சாண்டில்யன் போன்றோர் சரித்திர நாவல்கள் எழுதிய ஆசிரியர் ஆவர்.

சமூக நாவல்கள் என்ற வகையில் தமிழ் நாட்டில் வாழும் நடுத்தரக் குடும்பங்களின் வாழ்க்கைப் பிரச்சினைகளும் கிராமிய மக்களின் வாழ்க்கை முறைகளும் நாவல்களில் அலசி ஆராயப்பட்டன. உதாரணமாக, கிராமத்து மக்களின் வாழ்க்கையைக் கதாபாத்திரமாகக் கொண்டு ஆர். சண்முகசுந்தரம் எழுதிய பூவும் பிஞ்சும்; தமிழ் நாட்டின் சமுதாயக் குறைபாடுகளை உணர்த்தும் வகையில் மு. வரதராஜன் எழுதிய 'கள்ளோ காவியமோ' தொழிலாளர் பிரச்சினையை மையமாகக் கொண்டு இரகு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாதன் எழுதிய 'பஞ்சும் பசியும்' போன்ற நாவல்களைச் சிறப்பாக இங்கு குறிப்பிடலாம். இதுபோல ஈழத்தில் சமூகக் குறைபாடுகள் சாதி ஏற்றத் தாழ்வுகள்போன்ற பல்வேறு சமூகப் பிரச்சினைகளைக் கருவாகக் கொண்டு ஈழத்தில் எஸ். பொன்னுத்துரை, இளங்கீரன், கணேசலிங்கன், டானியல், போன்றவர்கள் கதைகள் எழுதி உள்ளனர். மொழிபெயர்ப்பு நாவல்கள் என்ற வகையில் ஐரோப்பிய மொழிகளில் இருந்து மட்டுமன்றி இந்திய மொழிகளிலிருந்தும் பல நாவல்கள் மொழி பெயர்க்கப்பட்டன. உதாரணமாக வங்காள மொழியிலிருந்து தாகூரின் நாவல்களும், மராட்டி மொழியில் இருந்து காண்டேகரின் நாவல்களும் மொழிபெயர்க்கப்பட்டன. ஆங்கில, பிரெஞ்சு, ஜேர்மன், ருஷ்ய, மொழி நாவல்களும் மொழி பெயர்க்கப்பட்டன. டால்ஸ்டாயின் 'போரும் சமாதானமும்' இவ்வகை நாவல்களில் பிரசித்தி பெற்றது.

## 01. தனிமனித வாதம் :-

அதாவது சுதந்திரத்துக்குப் பின்னர் வெளி வந்த நாவல்களில் குறிப்பிட்ட சில பண்புகளை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. அவற்றில் முதன்மையானது தனி மனித வாதம் ஆகும். இந்தப் பண்பு பத்மாவதி சரித்திரம் தீனதயாளு போன்ற ஆரம்பகால நாவல்களிற் காணப்பட்டதும் இன்று மேலோங்கிக் காணப்படுகின்றது. அதாவது பிரதான பாத்திரங்கள் உணர்வு பூர்வமாக தமது தனிமையையும் தனித்தன்மையையும் வெளிப்படுத்துவதோடு அதன் அடிப்படையில் உலகத்தை நோக்குவதையும் அவதானிக்கலாம். உதாரணமாக இந்திரா பார்த்தசாரதியின் 'திரைகளுக்கு அப்பால்' என்ற நாவலில் வரும் பூமா, ஜானகிராமனின் 'மரப்பசுவில்' வரும் அம்மிணி அகிலனின் 'எங்கே போகிறோம்' நாவலில் வரும் புவனா ஜெயகாந்தனின் 'சில நேரங்களில் சில மனிதர்கள்' என்ற நாவலில் வரும் கங்கா போன்ற பாத்திரங்களைக் குறிப்பிடலாம்.

## 02. ஒழுக்கப் பண்பு :-

அண்மைக்கால நாவல்களில் இடம் பெறும் பிரச்சினைகளில் ஒன்று மனிதரின் ஒழுக்கப் பண்பாகும். முந்தியகால நாவல்களும் ஒழுக்கவியல் என்பது குடும்பம், சமூகம், பண்பாடு, சடங்கு, சம்பிரதாயங்கள் என்ற வகையில் பாத்திரங்களில் ஒழுக்கப் பிரச்சினைகள் எடுத்தாளப்பட்டன. ஆனால், அண்மைக் கால நாவல்களில் பாலுறவு மட்டுமே ஒழுக்கப் பிரச்சினைகளாகக் கையாளப்படுகின்றன. தி. ஜானகிராமனின் அம்மா வந்தாள், மோகமுள், செம்பருத்தி முதலிய நாவல்களைக் குறிப்பிடலாம்.

தொடரும்...

திரு. கி. நடராசா
(அதிபர், யா / உடுப்பிட்டி அ. மி. கல்லூரி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Easy way to Learn English

## PART 9

I. **Underline the correct tense given in the bracket.**

(a) I ............... ride bicycle well, but now I dont
( is used to — use to — was used to )

(b) Mr. Ravy ........ on the 3rd of september 1950
( is born — was born — will be born )

(c) Snow ............... when the sun rises
( vanished — vanishing — vanishes )

(d) No 751 bus usually ............... at 8. A. M.
( arrived — arrives — arriving )

(e) I can,t work no more. I ............... my work.
( has finished — have finished — was finishing)

(f) Why is that boy crying. He ............... crying since he got up from bed.
( is crying — has cried — has been crying)

(g) I ............... him by next week.
( meet — met — shall be meeting )

(h) Sri Lankan farmers ............... natural manure for centuries before the artificial manure came into use.
( used — had used — had been using )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(i) IT ..................... raining from 6 A. M. to 11 A. M. yesterday.

( has been — had been — will have been )

(j) He ..... ........ painting the wall tomorrow.

( had been — has been — will have been )

II. **Comprehension Passage**

The Children stopped chattering as Miss Huges entered the classroom. Then they stood up as one body and said in a loud chorus.

" Good Morning, Teacher. "

Miss Huges smiled, said good morning too and told the class to sit down. At a glance there seemed to be about thirty-five peoples in class. The Majority were girls, She noticed several intelligent faces. All the Pupils were watching intently, what sort of person she was.

" I suppose you want to know my name ", She said. But before she could tell them, some one in the class called out. " It is Miss Huges. " Every body laughed. Miss Huges laughed too.

" News travels quickly ", she said. " I am afraid it will take me longer to learn all your names ".

III. **Answer questions briefly.**

(1) What were the pupils doing before Miss Huges entering the class room.

(2) How did the pupils greet the teacher.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(3) How did the teacher greet in turn.

(4) Who were the Majority in the class.

(5) Did the teacher intrdouce herself to the class

VI. **Write the meaning in tamil for the phrases and words.**

(1) Stood up as one body

(2) At a glance

(3) Intently

(4) News travel quickly

(5) Chattering

(6) Chorus

VI. **Some English Sayings** ( பழ மொழிகள் )

(1) Killing two birds at one shot
ஒரு எறிவில் இரண்டு மாங்காய் விழுத்துவது

(2) Prevention is better than cure
வைத்தியரின் கிசைப்பெறுவதிலும் பார்க்க வருமுன் காப்பது சிறந்தது

(3) Misfortunes never come alone
துன்பங்கள் ஒருபோதும் தனித்து வராது

(4) You are what you think
நீர் என்ன நினைக்கிறீரோ அதாக ஆவீர்

(5) Bad news have wings
கூடாத புதினங்களுக்கு இறைக்கைகள் உண்டு

S. Thurairajah
( English Tutor )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விஞ்ஞான விளக்கம்

காயத்தில் வெளிவரும் குருதி உறைகிறது. ஆனால் உடனே அது உறைவதில்லை.

- ❋ குருதி உறைவதற்குக் குருதியில் உள்ள குருதிச் சிறுதட்டுக்கள் என்னும் கலம் உதவும்.
- ❋ குருதிச் சிறுதட்டு காயங்களில் சிதைவடைவதால் அதில் இருந்து வெளிவரும் துரோம்போபிளாஸ்ரின் குருதித்திரவ விழையத்திலுள்ள கல்சியம், புரோத்துரோம்பின் என்பவற்றுடன் சேர்ந்து துரோம்பினை உண்டாக்கும்.
- ❋ துரோம்பின், பைபிரினோஜினுடன் சேர்ந்து பைபிரின் இழையை உண்டாக்கும்.
- ❋ பைபிரின் வலையில் குருதிக் கலங்கள் சிக்கிக்கொள்ளக் குருதி உறையும்.

தடிமன் காலங்களில் ஒருவரின் கேட்குந் திறன் குறைவதேன்?

- ❋ தடிமன் காலங்களில் ஊத்தேக்கியாவின் குழாயினுள் சளியம் அடைக்கின்றது.
- ❋ இதனால் உள் அமுக்கம் அதிகரிக்க செவிப்பறை வெளிநோக்கி அமுக்கப்படும்.
- ❋ எனவே செவிப்பறையின் அதிர்வு குறையவே கேட்குந்திறன் குறைவடையும்.

செங்குருதிக் கலங்கள் நீரில் இட்டுச் சிறிது நேரத்தில் வெடிக்கின்றன. ஆனால் அவை குருதித் திரவ விழையத்தில் வெடிப்பதில்லை ஏன்?

- ❋ செங்குருதிக் கலங்களின் கலச்சாற்றின் செறிவு, நீர்ச்செறிவிலும் கூடியது.
- ❋ நீரில் இட்டதும் பிரசாரணத்தின் மூலம் நீர் செங்குருதியங்களில் செல்லும்.
- ❋ இதனால் செங்குருதிக் கலங்கள் வீக்கமடைகின்றன.
- ❋ செங்குருதிக் கலங்கள் கலச்சுவரைக் கொண்டிருப்பதில்லை, மெல்லிய கல மென்சவ்வே உண்டு.
- ❋ இதனால் கலவளவு அதிகரித்ததும் வெடிக்கின்றன.

- அறிவியல் உண்மைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐப்பசி மாத வாராந்த நிகழ்வுகள்

02 – 10 – 98 வெள்ளிக்கிழமை முற்பகல் 10–30 மணியளவில்
அறிமுகவுரை : செல்வன். S. தியாகச்சந்திரன்
(இந்து இளைஞர் மன்றம் உடுவில்)
**விடயம் : 'உரையரங்கு கலைநிகழ்வு'**
வழங்குபவர்கள் : உடுவில் இந்து இளைஞர் மன்ற அன்பர்கள்

---

09 – 10 – 98 வெள்ளிக்கிழமை 10 – 30 மணியளவில்
அறிமுகவுரை : திரு. ஐ. சண்முகலிங்கம்
(ஆசிரியர் ம. மகா. வித்தியாலயம், நெல்லியடி)
**சொற்பொழிவு : 'பக்தியும் பகுத்தறிவும்'**
வழங்குபவர் : திரு. இ. இராகவன்
(ஆசிரியர், யா/ விக்னேஸ்வராக் கல்லூரி கரவெட்டி)

---

16 – 10 – 98 வெள்ளிக்கிழமை முற்பகல் 10 – 30 மணியளவில்
அறிமுகவுரை : திரு. சி. செ. சோமசுந்தரம்
(இளைப்பாறிய, வங்கி முகாமையாளர்)
**சொற்பொழிவு: 'ஜெயம் தருவான் ஜெய கிருஸ்ணன்'**
வழங்குபவர் : 'சித்தாந்த சாகரம்' அழகு ஜெகதீஸ்வரதேசிகர்
(ஆசிரியர், வல்வெட்டி இந்து தமிழ் கலவன் பாடசாலை)

---

23 – 10 – 98 வெள்ளிக்கிழமை முற்பகல் 10 – 30 மணியளவில்
அறிமுகவுரை : நல்லை ஆதீன முதல்வர்
**விடயம் : 'இன்னிசை'**
வழங்குபவர் : சி. கருணாகரன் ( B. A. Dip-in-Music )
(ஆசிரியர், மத்திய கல்லூரி யாழ்ப்பாணம்)
வயலின்: திரு K. குகபரன் ( Dip-in-Music )
( ஆசிரியர் கொட்டடி நமசிவாய வித்தியாசாலை )
மிருதங்கம்: திரு. S. துரைராஜா ( Dip-in–Music )
( ஆசிரியர்; யா/ விக்னேஸ்வரா வித்தியாலயம் )

---

30 – 10 – 98 வெள்ளிக்கிழமை முற்பகல் 10 – 30 மணியளவில்

# ஞானச்சுடர் - மாத வெளியீடு

# ஐப்பசி - 1998

வெளியீட்டுரை: சமூகஜோதி கா. கணேசநாதன்
( சமாதான நீதவான், ஓய்வுபெற்ற அதிபர், கொழும்புத்துறை)
ஆய்வுரை: திரு. சிவ. மகாலிங்கம் ( விரிவுரையாளர் )
( பலாலி ஆசிரியர் பயிற்சி கலாசாலை, திருநெல்வேலி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாசகர் போட்டி

முதல் பத்து மலரிலும் (ஜனவரி - ஒக்டோபர்) வெளியிடப் படும் விடயங்களை உள்ளடக்கியதாக வாசகர் இடையே போட்டி ஒன்று நடைபெறவுள்ளது. இப்போட்டியில் வெற்றி பெறுவோருக்கு வழமைபோல பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படும்.

போட்டி தொடர்பான விபரங்கள் நவம்பர் மாத இதழில் வெளியிடப்பட்டு போட்டி நடாத்தப்பட்டபின் அது பற்றிய முடிவுகள் 1999 ஜனவரி மலரில் வெளியிடப்படும்.

## அன்பான வேண்டுகோள்

மலருக்கு பொருத்தமான, தரமான ஆக்கங்களை எமக்கு அனுப்பி வைக்குமாறு சமய பெரியார்களையும், அறிஞர் பெருமக்களையும் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

மலர்க் குழு:
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை.
செல்வச்சந்நிதி, தொண்டைமானாறு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org